
மருத மைந்தனின்

# சங்கமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத ணை[illegible]ஞனின்

# சங்கமம்

PUBLIC LIBRARY
KALMUNAI

REFERENCE

வெளியீடு :

**நவ இலக்கிய மன்றம்,**

**காத்தான்குடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 14195

உரிமை ஆசிரியரு

முதற் பதிப்பு 1996.

PUBLIC LIBRARY
KALMUNAI

நவ இலக்கிய மன்ற வெளியீடு

ACCESSION NO: 14195
CLASS NO: 894-8111

விலை ரூ. 50 - 00

அச்சிட்டோர் :

**மில்லத் பிரிண்டர்ஸ்**
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-600001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

என்னுயர் வேஇலக் காக
இருந்து பணியீந் தவராம்
கண்ணிணைந் தபெற் றார்க்கும்
கல்வி தனைத்தந் தபெரு
நன்னா சான்மார் களுக்கும்
நாளெல் லாமென்ன நாடிப்
பல்லுத விபுரி காதற்
பணிமொழி யாள்தனுக் குமிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி அல்ஹாஜ். ஆ. மு. ஷரிபுத்தீன்
அவர்கள் மனமுவந்து வழங்கிய

# வாழ்த்து

சங்கமம் கண்டேன் தமிழின்பம் நான்சுவைத்தேன்
அங்குநான் பெற்ற அனுபவம்தான் - தங்கும்
முதன்முயற்சி மேலும் முதுமை யடைக
இதனைத் தொடர்ந்தும் இனி.

தீனோர் குறைந்த செருச்செய்வார் தோள்தட்டி
ஈனோர் மிகுந்தாரைத் தோற்கடித்து-மாணெண்ணும்
வாகை தருஞ்சொல் வரலாறு கூறுகின்ற
ஆகுநூல் சங்கமமே யாம்.

ஈர்துருவம் ஒன்றாய் இணைந்தகதை இன்தமிழின்
நேர்கவிதை கொண்டு நிறைசெய்தான் - பார்வாழ்
''மருதமைந்தன்'' வாழ்க வளர்கதமிழ் ஆர்வம்
பெருகவெனப் போற்றுதும் பேறு.

**''தமிழகம்''**
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பேசுகின்றது

கவிஞன் மருதமைந்தன் எனது பால்ய நண்பன். அவன் விதையாக ஊன்றி கவிதா உலகில் இலையாக வெடித்து, வீரா வேசத்துடன் நிலத்தைக் கிழித்து வெளிவந்தபோது அருகிலிருந்த நீர் வார்த்த சிலருள் நானும் ஒருவன். இன்று இவன் ஆலமரமாக வளர்ந்து வியாபித்து வானளாவ முதிர்ந்து நிற்பதைப் பார்த்து மகிழ்ந்து கைதட்டுகின்ற பல ரசிகர்களுள்ளும் நானும் ஒருவன்.

இவன் கருவாக உருவாகியபோதே அதில் திருவைக் கண்டேன். என் எதிர்பார்ப்புகள் பின்னர் பலவிதமானதால் என்னையும் ஒரு தீர்க்கதரிசியாக்கி விட்டவன் என்பதனால் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

காத்தான்குடிக் கவிஞர்களுள் இவன் முதிர்ந்தவன். கவிஞர் அப்துல் காதர்லெப்பை முந்திப் பிறந்த காரணத்தினால் இவன் மூத்தவனாக இல்லாதிருப்பினும் இவனும் மூத்தவனே. ஏனெனில் காத்தான்குடியில் இன்றுள்ள கவிதைத் தாயின் இளைய புத்திரர்கள் யாவரும் வாஞ்சையுடனும் வியப்புடனும் வழி காட்டுதலுக்காக நோக்குவது இவனையே.

ஆசிரியனாகப் பிறந்தது இவனது துரதிஷ்டம். இலங்கையில் பிறந்தது இன்னும் துரதிஷ்டம். இல்லாவிட்டால் இவன் ஒரு உமறுப் புலவராக இல்லாவிட்டாலும் நிச்சயமாக ஒரு சாரண பாஸ்கரனாக என்றோ முகிலைப்பிளந்து முழுநிலவைப் பிழிந்து காப்பிய ஒளியைப் பொழிந்திருப்பான். இருந்தாலும் பரவாயில்லை காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறதுதான் ஆனால் அது முடிந்துபோய் விடவில்லை. ''சங்கமத்தினூடாக இலக்கிய உலகில் ஒரு புதிய பயணத்தை துவங்குகின்ற என் நண்பன் என்றென்றும் இன்ப ஒளி பெருக்கும் இனிய தாரகைகளின் மத்தியில் தனது இடத்தை எட்டுவானா என்பதை எதிர்காலம்தான் சொல்லவேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரை அந்த இடத்தை சொந்தம் கொள்வதற்குத் தேவையான சகல தகுதிகளும் யோக்கியதையும் என் நண்பன் மருதமைந்தனுக்குண்டு என்பதை மட்டும் நான் உறுதியாகச் சொல்வேன். பெருமையும் கொள்வேன்.


**A.L.A. JAWATH.**
B. A. (Hons) Dip-in Ed,
L. L. B. Attorney-at-Law
KATTANKUDY

இவ்வண்ணம்,
**அ. லெ. அப்துல் ஜவாத்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

காத்திரமான ஒரு சமுதாயத்தின் உருவாக்கத்திற்கு அச் சமுதாயத்திலிருந்து எழுதுபவனின் பணி அளப்பெரியதாகும். தான் சார்ந்த சமுதாயத்தின் அடிப்படையில் காணப்படுகின்ற ஓட்டை, உடைசல்களை, வளைவு, நெளிவுகளை, இன்ப துன்பங்களை, உயர்வுகளை, ஊனங்களை வெளிக்கொணர்ந்து தீர்வு சொல்லி சமுதாயம் செம்மையுற உழைப்பவன் எழுது பவனே.

அந்த வகையில் பணி தூக்கி நின்ற மருதமைந்தன் இன்று நம்முன்னோர்கள் செய்து சென்ற வீரதீர வரலாறுகளில் ஒன்றில் அடித்தளத்தில் அமர்ந்து தன் கற்பனைத் திறனைக் கலந்து சங்கமத்தைத் தந்துள்ளார்.

இது கவிஞர் மருதமைந்தனின் படிப்போர் நா பாகாய் இனிக்கும் பாக்களின் சங்கமமே இச்சங்கமமாகும்.

எமது மண்ணிலிருந்து எழுதுபவர்களின் சிறந்த ஆக்கங் களை வெளிக்கொணர வேண்டும் என்கின்ற எங்கள் இலட்சி யப் பாதையில் இதுவரை பல நல்ல ஆக்கங்களை நாம் அளித் துள்ளோம். அவற்றிற்கு வாசகர்கள் வழங்கிய பேராதரவின் பிரசவமே உங்கள் கரங்களிற் சங்கமமாகியிருக்கும் மருதமைந் தனின் சங்கமம்.

எங்களின் முந்திய வெளியீடுகளுக்கு இலக்கிய இதயங் கள் வழங்கிய பேராதரவு மருதமைந்தனின் சங்கமத்திற்கும் கிடைக்குமென்பது எமது வெகுவான நம்பிக்கை.

நல்லதொரு வினை செய்துவிட்ட திருப்தி எமக்கு. அதை நலங்கெடப் புழுதியிற் புரட்டுவதும் பழுதின்றிப் பாதுகாப்பதும் வாசகர் நெஞ்சங்களின் விருப்பு வெறுப்பைச் சார்ந்ததாகும்.

**நவ இலக்கிய மன்றம்**
**காத்தான் குடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சம் கேளுங்கள்

பன்னெடு நாட்களாக என்னுள்ளத்தில் துளிர்விட்டுக் கொண்டிருந்தது ஒரு இஸ்லாமிய வீரக் காதல் காவியம் ஆக்க வேண்டுமென்ற அவா.

அதன் காரணமாகப் பல இஸ்லாமிய வீரப் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்வுகளைப் புரட்டினேன். கடைசியாகத் துருக்கி நாட்டு சுல்தான் அலப் அர்ஸலாவின் போர் நிகழ்ச்சி ஒன்று என்மனத்தை ஈர்த்தது.

அதனை மையக்கருவாகக் கொண்டு இஸ்லாமிய கண்ணோட்டத்துடன் இணைத்து அதனூடே காதற் கற்பனையை இழையோடச் செய்து இக்காவியத்தை உருவாக்கினேன்.

இக்காவியத்தில் தொடர்புறுகின்ற கதாபாத்திரங்களான 'பாஹிம்கான்', 'பிலோமினா', 'ஜேகப்' 'மாக்கிரட்' என்பவர்கள் எனது கற்பனையின் சிருஷ்டிகளே. இவர்களிடை ஊடாடுஞ் செயற்பாடுகள் யாவும் என் கற்பனையே யாகும்.

இவ்வாக்கம் பல நாட்களாக உறங்கிக் கிடந்த காலை இதனை அச்சிட்டு உயிர்ப்பிக்க அரும்பாடு பட்ட என் அன்புக்குரிய நண்பன் **அன்வர் ஷரிபுத்தீன்** அவர்கள் மாரடைப்பினால் இறையடி சேர நேர்ந்தது இதன் வெளியீட்டை மேலும் தாமதப்படுத்தி விட்டது. என்றாலும் இதன் வெளியீட்டுக்காக அயராதுழைத்த என் நண்பனின் பரலோக நல்வாழ்வுக்காக நான் என்றென்றும் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இந்நூலுக்கு நல்வாழ்த்தீந்த மதிப்புக்குரிய பெரியார் புலவர்மணி, அல்ஹாஜ் **ஆ. மு. ஷரிபுத்தீன்** அவர்களுக்கும் என்னைப் பற்றி இதயத்தால் மதிப்புரை வழங்கிய என் ஆத்ம நண்பன் **ஏ. எல். ஏ. ஜவாத்** B.A., (Hons), Dip-in-Ed. L. L. B. Attorney at Law அவர்களுக்கும் என் இதயம் பூக்கும் நன்றிகள் என்றென்றும் உரித்தாவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வெளியீட்டுக்காக அளப்பரிய உதவிகளை ஈந்த எனதன்பு மாணவர்கள் **கே. எம். எம். பௌஸ்** (UK) **ஏ. எம். எம். றபீக்** ஆகியோருக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். இதனை சிறப்புற வெளியிட்டுதவிய காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தார்க்கும், அழகுற அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் என்னுள்ளம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

கடைசியாக இக்காவியத்தை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இதனை ஓதி ஊக்கந் தருவது உங்கள் உரிமை.

**மருதமைந்தன்.**

**"ஷிரின் கொற்"**
134/3 பிரதான வீதி,
காத்தான்குடி - 2.

# எழில் கூட்டும் இறை மொழிகள்

உறக்கத்தில் இதங்காணுஞ் சாமவேளை
உலகுமுழு அமைதிக்குள் ஓய்வுகாண;
இறைக்கஞ்சி எழுந்துதனைத் தூய்மையாக்கி
இறைமறையை ஓதுகிறான் நாதந்துள்ள !

வாளொடியுந் தோல்வலியான் அர்ஸலானின்
வார்த்தைகளில் இறைமொழிகள் பொங்கிநிற்க;
பால்வடிக்கும் மதிமுகத்தாள் பக்கம்வந்து
பார்த்ததனை இரசித்தாள் பக்திபொங்க.

நெஞ்சகத்தி லிருந்தோங்கு நீளொலிகள்
நிறைந்துவரச்; சிலமொழிகள் தொண்டையினாற்;
பிஞ்சுமொழி மூக்கதனாற் பிறக்க; யிதழ்
பிரிந்தொருங்கே சேர்வதினாற் சிலமொழிகள்.

ஒன்றாகி நடனமிட; உயர்ந்த மேடை
ஊர்தென்றல் ஆக்கிவிட்டாள்; உயர்மொழிகள்
நின்றாடிக் களித்தனவே; நெஞ்சமெல்லாம்
நித்தியனைத் துதித்துலகை மறந்துநிற்க.

காற்றடிக்க வளைந்துநிமிர் நாணலென்ன;
கதிர்படிய இதழ்விரியும் பூக்களென்ன;
பாற்கடலில் இயற்கைமடி அசைதலென்ன;
பார்வாழ்வோர் மகிழ்ச்சியுற ஆடிற்றன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலோசை யதிலேதான் என்னயின்பம்!
எழுந்தோடி வந்ததுவோ ஓசைவண்ணம்!
அழியாத ஓர்சக்தி ஆமாம் ஆமாம்;
அப்படித்தான் என்றிருப்பார் கண்டோரெல்லாம்.

கணைக்காலைக் கொஞ்சுமெழிற் சதங்கையில்லை;
கைகளிலே மருதோன்றிச் சாயமில்லை;
இணைக்காத கயல்விழியில் மையுமில்லை;
என்றாலும் அவைநடனம் அழகுதானே!

பார்ப்போரின் விழியிமைக்குட் புகவுமில்லை;
பற்பலவா றெண்ணமெதும் எழவுமில்லை;
ஆர்ப்பரித்துக் கைதட்டல் பெறவுமில்லை;
ஆனாலும் ஆட்டமதில் எழிலேயுண்டு!

காலில்லைக் கையில்லை கழுத்துமில்லை;
கண்மூக்குச் செவிவாய்கள் தானுமில்லை;
நீள்வழியைத் தேய்க்குமோர் நடையுமில்லை;
நிலத்துமிசை நிறைந்துவழி ஆட்டமுண்டு!

''ஒற்றுமையே உலகத்தி னூன்றுகோலாம்
ஓர்கயிற்றைப் பற்றிடுவீர்'', எனுங்கருத்தைப்
பற்றியதோர் கவிதைதனைப் பாடிப்பாடிப்
பல்லாட்டங் காட்டினவே இறையின் சொற்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவாளைத் தாங்குகின்ற வீரராட்டம்;
எழில்சிரிக்கும் முகமெடுத்த மாதராட்டம்;
கொடைநீதி அன்பாட்சி அரசராட்டம்;
கொற்றவனின் பக்திநிலை கொண்டோராட்டம்!

இல்வாழ்வின் பண்புநிலை துலங்குமாட்டம்;
எழில்மகவை வளர்க்குமுறை இனியவாட்டம்;
தொல்புகழை கூறுமொரு சுவைகொள்ளாட்டம்;
சோர்வகற்றி வாழவழி காட்டுமாட்டம்.

ஆட்டத்தில் மதிமயங்கி அயர்ந்துநின்ற
அகிலந்தோ ணுயிரினங்கள் அறிவுகொள்ளக்
கூட்டத்தைக் கலைப்பதுபோற் கொக்கரித்துக்
கூவிற்று சேவலொரு கூரைநின்று.

மறைமூடி எழுந்திட்டான் மன்னர்கோனும்;
மனமகிழ்ந்து பின்தொடர இல்லச்செல்வி;
சிறைகாண வாழ்த்துதல்போல் ''பாங்கின்''சத்தம்
சேர்ந்தெழவே எண்டிக்கும் இறைவணக்கம்.

இறையேத்தி நிறைவுற்றே எழுந்தான்மன்னன்;
ஈர்கையில் அமுதேந்தி நின்றாள்கன்னி;
நறையிதழிற் குறுநகையுந் தவழக்கண்கள்
நாதன்விழி ஊடுருவக் கன்னந்தொட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புநிலை பழையதுதான் என்றாலென்ன?
தோன்றிவரும் உணர்ச்சியதும் பழைமைதானோ?
தடமெதிர்க்கும் நெஞ்சினிலே தலையைவைத்து
தளிர்க்கொடியாள் சாய்வுற்றாள் தாங்கிநின்றாள்.

வலக்கரத்தின் வளைவினிலே இடையைக்கோர்த்து
வாழைநுனிக் கழுத்ததனை இடக்கைதாங்க
குலக்கொழுந்தை யாழாகக் கொண்டுகண்ணின்
குறுவிரிப்பால் உணர்விசையை மீட்டுகின்றான்.

இல்லறத்தி னன்போசை யாழில்மேவ,
இருமனத்துத் துளும்பலெலாந் தாளங்கொட்ட,
பள்ளத்து தன்மைநிலை மேவும்வெள்ளப்
பாங்கினிலே உணர்வாற்றில் மிதந்தாரன்னார்!

முற்றத்து மல்லிகையும் மணம்பரப்ப,
முழுநிலவு கதிருக்கி இதமுங்கூட்ட,
வற்றாத ஆசைமது விளையஉள்ளில்
வாழ்வின்பப் பயணவெளி உலாவுங்காலை,

முன்வாயல் தட்டுகின்ற ஓசைகேட்டு
முந்தானை எடுத்துமுகந் துடைத்தினியாள்
கன்னத்து மயிரொதுக்கிக் காற்றாய்ப்போனாள்;
கலைப்புற்ற மன்னவனும் அழைப்புவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடிச் சேதி

நெற்றியிலே வியர்வைத்துளி நிறைந்துசொட்ட,
நீள்மூச்சால் மார்புயரக் கண்கள்சேந்து
பற்றியொளிர் வாளதனைக் கையில்வீரம்
படரவுடற் றுடிப்புடனே அமைச்சன்வந்தான்.

இடைவாளைப் பிடித்தமைச்சன் நிமிர்ந்துநின்றான்;
ஏக்கத்தை விட்டோர்மை தோளிலேறிப்
''படையலேதான் களத்தினிலே இனியெமக்குப்
பசியேது'', எனஆடிப் பாடலாச்சு.

''நாடாசை பிடித்துவெறி நாயைப்போல
நமையெதிர்க்க வருகின்றான் உரோமமன்னன்
கூடாத மனநிலையான் 'உரோமனஸின்'
கொட்டத்தை யாமடக்க வேண்டு'', மென்றான்.

''மலையடுக்க உயரமுனை மண்ணின்கும்பம்
மழைத்துளியால் அழிதலுறும் நிலையைக்காணான்
விலைகொடுத்து வினைவாங்க விழைந்துவிட்டான்
வீரத்தின் பெருமைதனைக் காட்டச்செய்வோம்''.

வீரத்தின் பிறப்புமலை அமைச்சன்வாயில்
விளைந்துவரக் கோபமெனும் ஆறுபொங்கித்
தீரத்தின் திருவுருவாம் ''அர்ஸலானும்''
திகைப்பின்றி ''எதிர்பார்த்தேன்'' என்றான்துள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓங்கட்டும் படைமுரசம் எட்டுத்திக்கும்
ஒளிரட்டும் உடைவாட்கள் கரத்திலேறி
வீங்கட்டும் வீரர்புயம் வெற்றியோதை
விளங்கட்டும்,'' எனவோதி மன்னன்சென்றான்.

சிற்றலியன் நடைபெயர்த்தான் கொற்றோன்; வீரத்
திறள்காளை பாங்கினிலே அமைச்சனேகிப்
''பொற்பறையை முழக்கிடுக'' என்றான்; எங்கும்
போர்முரசம் தட்டிடுவோன் துள்ளிச்சென்றான்.

படுத்தயர்ந்த பறவைகளும் கேட்டுத்துள்ளிப்
பல்லழகு இறக்கையினால் மார்பைத்தட்டி,
''தொடுத்திடுவோம் போராங்கே'' என்றாற்போல
தொனியினிமை யூக்கினவே ஓடியோடி!

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசோதை முழங்கிற்று!

''நாடுகொள்ள ஓடிவரும் உரோமனஸை
நலிவடையச் செய்தெங்கள் பெருமைகாட்டக்
கூடிவிட்டார் படைநாலும் கொற்றோன் நண்பன்
கூர்வேலன் பாஹிம்கான் தலைமைதாங்க''

என்றினிய முரசறைவோன் முழக்கிச்செல்ல
ஈர்மருங்கும் திரள்கொண்ட மக்கள்வெள்ளம்
''வென்றிடுக, வென்றிடுக வெற்றியெங்கள்
விளையாட்டுப் பொரு''ளென்று வாழ்த்தலானார்.

நாற்படையும் ஒலிமுழக்கிச் செல்லலாச்சு,
நகுங்குண்ட புல்பூண்டு புழுதியாச்சு;
கூற்றமெனத் தெரியுருவிற் குதிரையேறிக்
கொடிதாங்கிப் பாஹிம்கான் பறக்கலானான்.

ஒளிர்வாளும் உறைவிட்டுத் துள்ளலாச்சு;
உயர்இறையின் நாமம்வான் முட்டலாச்சு
களிறுநடை பூமிதனைப் பணிக்கலாச்சு;
காண்போர்நெஞ் சஞ்சவுடல் நடுங்கலாச்சு.

மிட்டாய்தனைப் பொறுக்கிடவே ஓடுகின்ற
மென்மனத்துச் செல்வரென வீரர்செல்ல;
எட்டாத வான்முட்டி நீண்டபச்சை
இளம்பிறைசேர் கொடியாடிப் பறக்குதம்மா!

வந்திடுவீ ரென்றந்தக் கொடியுமாட,
வளர்வழியைக் குறுக்கியவர் முன்னேசெல்லல்
செந்நிணஞ்சேர் புனலாடச் செல்லுவதாய்ச்
செருக்கடக்கச் செல்பவரைக் காண்போமம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமனத்தில் தீராப்பாசம்

விடைகொடுத்து வாசல்வரை வந்தநல்லாள்,
வீரத்தின் குழாமோங்கிச் செல்லுவதாய்
நடைபெருக்குந் தானைகளைக் கண்டுநின்றாள்;
நலிவொன்று அவள்மனத்தைச் சுரண்டலாச்சு.

காத்தகொழு பூத்தமலர் களத்தைநோக்கக்
கண்மலரை இமைமுகைக்குட் படுத்தாவண்ணம்
ஏத்தியிறை இறைஞ்சுகிறாள் வெற்றி காண,
என்றாலும் அவளுள்ளம் படியவில்லை.

## வேறு

கொலைவாளுக் கிணையான விழிவாளிற் கண்ணீர்
கொதித்தேறி முத்தென்று திவலாகச் சொட்ட,
அலைமோதி நிலைமாறும் அகல்கொண்ட நெஞ்சில்
அடிநின்று நெடுமூச்சு விடையின்றித் துள்ளும்.

அவிழ்கூந்தல் அலையாட நெகிழ்கொண்டே வுள்ளம்
அசைந்தாடும், நிலைகாணும், அயர்தூக்கி யேங்கும்
நவில்கின்ற மொழியாவும் நாசத்துள் மூழ்க,
நற்பாங்கி மொழியற்று நினைவின்றி நிற்பாள்.

சூடாறப் பால்பழமுஞ் சேடியரும் வாட,
சொல்லற்று மரமாக வெல்லலரு மொழியாள்
கோடிமனக் குழப்பங்களுங் கொல்லநிலை மாறி
குத்துங்கூர் முள்ளாக மெத்தைமலர் கண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளுமனக் கிள்ளைமொழி வெள்ளமென வற்ற
அழகுமயில் நடனமற; அழிதலுறல் போல
தொல்லைதரப் பிரிவுணர்ச்சி சோதிநிகர் முகத்தாள்
சோர்ந்தெதிரே நோக்குற்றாள் சார்ந்தபெருந் துயரால்.

பதித்தகடை நனிமுத்திப் பழச்சாறு மிதழில்
படரநுனி நாத்தடவ பசிதாகம் போக்கி,
கொதித்துவரும் விம்மலதைக் குறைத்துவிழி மூடிக்
கூம்பிவிட்ட ஆம்பலெனக் குழைந்தவளும் கிடந்தாள்.

## வேறு

நின்றபடி சிந்தித்தாள் ஏதோவென்று
நேர்வந்து கிடைத்ததுவாய் நிமிர்ந்துநின்று
தண்டுநிகர் கைதூக்கித் தலையைக்கோதித்
தண்ணிதழை விரித்தாள்பொய்ச் சிரிப்புச்சிந்த.

பாங்கிமனம் துள்ளியது, பக்கம்நின்றோர்
பார்த்ததனைச் சிரித்திட்டார்; பாட்டியம்மா
ஏங்குதலை விட்டவளேன் சிரிக்கின்றாளென்
இடருற்றாள், எனக்கூர்ந்து நோக்கலானாள்.

குங்குமங்கொள் சிமிழ்வாயைத் திறந்துசெல்வி
கூடிநின்றோர் மனமகிழச் செப்பலானாள்,
''பொங்குவெறி பாசவலை எந்தன்வீரப்
பொதிமனத்தை சூழ்ந்ததன்றி வேறுஇல்லை.''

என்றினிதாய்ப் பைங்கிளியாள் கூறியாங்கே
எழிலொழுகு பாதமலர் பெயர்த்துவைக்க,
நின்றவர்கள் கண்களெனாந் தாங்கலாச்சு
நீள்குழலாள் மென்பாதம் நோவுமென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாத பிரிவு

இளம்பிறை துலங்க நீண்ட
எழிற்பசுங் கொடியுந் தாங்கிக்
களம்புக பாஹிம் நின்றான்;
காண்பவர் மருளப் பண்புக்
குலந்தரு அமைச்சன் முன்னிக்
கொடிநுனை வேலு மீந்து
''நிலன்வளர் வெற்றி யோசை
நிறைத்துநீ வருக'', வென்றான்.

அமைச்சனும் வாழ்த்தி யேக,
அருளொழு மாதா முன்னி,
''உனைப்பெற யாதுஞ் செய்தேன்
உயர்பெரு பாக்கி யந்தான்,
இமைப்பொழு துற்று யெங்கள்
எதிரியைத் துகளு மாக்கி
குமைத்தவர் வீரம், வெற்றி
கொண்டு நீ வருக'', வென்றாள்.

மாதாவும் மற்றை யோரும்
மகிழ்ந்துநல் வாழ்த்துக் கூறி
நாதன்வான் கொள்வோ னேத்தி
நற்கரந் தூக்கித், 'தக்பீர்'
ஓதிட, வாள் பெயர்ந்து
ஒடிந்துமண் வீழ்ந்த தாக,
சேதியாய் வெற்றி யொன்றைச்
செப்பினார் கூடி நின்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியினில் ஏறிப் பாஹிம்
பறந்தனன் முன்னால்; சேனை
நெரியவே அனைத்துங் காலால்
நீள்வழி குறுக லாகச்
சொரியவே வியர்வை; வீரஞ்
சொட்டவே மார் பிரிந்து
கரியினில் அமர்ந்து மன்னன்
கதிப்புடன் செல்ல லானான்

படைபெயர் பாதம் பட்டுப்
படிந்தெழும் பற்றை புற்கள்
தடையில செல்லு மென்று
தலைதனைத் தாழ்த்தி நிற்க;
நடைவழி மருங்கில் முல்லை
நசிந்திடா வண்ணம் தென்றல்
தடைத்திரை யிட்டு மெல்லச்
சாய்த்ததை மடக்கி வைக்கும்.

ஓடிய படைகள் சற்றே
ஒய்வினைக் கொள்ளல் வேண்டிச்
சாடின ஆற்றி னோரஞ்
சடைத்தடர் காட்டி னூடே;
கூடினர் ஒருங்கே வீரர்
கொற்றவன் தானுஞ் சேர
நீடிய ஓய்வு கொண்டார்
நித்தியன் துதித்த பின்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

கானதி யோர மந்தக்
காளையின் மனத்தை ஈர்த்துத்
தேனெனக் கதைகள் சொல்லித்
தெவிட்டிடாக் குளிர்மை யூட்டப்
பேணியே இயற்கைத் தாயும்
பேரெழில் வதனங் காட்டி
ஏணுலா தோளன் தன்னை
இரசியென் றழைத்து நின்றாள்.

குதிரை மீதேறிப் பாஹிம்
கொதித்தெழ அழகு வேட்கை;
நதிவழி யோரஞ் சென்றான்,
நாற்றிசை நோக்கி நோக்கி;
பதிதனிற் காணாச் செல்வம்
பாரினர் செய்யாக் கோலம்
வதியவே கானைச் சூழ்ந்து
வளர்த்தனன் வழியை நேராய்.

பன்னிறப் பூக்கள் நெஞ்சைப்
பறித்திடும் மயில்கள், மான்கள்,
தன்னொலிக் குயில்கள், புட்தள்
சார்ந்தெழுங் கொடிகள், மற்றும்
விண்ணையே எட்டி நிற்கும்
விரிந்தடர் மரங்கள் யாவும்
கண்களைப் பறிக்க வீரன்
காட்டினில் உலாவுங் காலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூக்குரல் கேட்டான் பெண்கள்
கொற்றவன் நண்பன்; என்ன
தாக்கமோ வனத்தில் என்று
தளர்ந்தனன் சற்றே; உள்ளம்
ஊக்கிட செல்க வென்று
உயர்பரி யோட்டித் திக்கை
நோக்கியே பறந்த வேங்கை
நொடிப்பொழு துற்றா னாங்கே.

கண்டனன் ஒருத்தி வன்புக்
காமுகன் கையிற் சிக்கிச்
சண்டையில் நின்றாள்; தன்னின்
தகைமிகு கற்பைக் காக்க,
அண்டையிற் பெண்கள் நால்வர்
அலறியே கூச்ச லிட்டு
நின்றனர்; பாய்ந்தான் பாஹிம்
நிலத்தினிற் சாய்ந்தான் வம்பன்.

தாக்கலால் வீழ்ந்தோன் துள்ளித்
தாவினான் பாஹிம் மீது;
பூக்கன்னி தாங்கு கூந்தல்
பூவையோர் சூழ நின்றோன்;
போக்கியே தாக்கல் கையாற்
பொதியெனத் தூக்கி வீழ்த்தித்
தேக்கினான் பாரம் தன்னின்
சிறுமையோன் திணற லுற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாரிவன்?'' என்றான், சேடி
''யாம்பணி உரோ மனஸின்
பேர்படை வீரன் ஜேகப்
பெண்ணெனிற் சாவோன்'', என்றாள்;
கூர்நுனி வேலை நெஞ்சிற்
குத்தியே பாஹிம், ''நாயே,
சீர்மையில் மகனே உந்தன்
சிரங்காத் தோடு,'' மென்றான்.

எழுந்தவன் ஓட லானான்
இளவலும் முன்னி வந்தான்;
செழுந்தளிர் மேனி யாளும்
சேடியர் சூழ நின்று,
உளந்தனில் ஊறுந் நன்றி
உரைத்திட இயலா ளாகக்
குழந்தைபோ லழுதாள், பாஹிம்
குதிரையை நாடிச் சென்றான்.

மெல்லவே வந்தாள் சொற்கள்
மேவிட யிதழில் சேடி,
''சொல்லுக'' வென்றாள்; தோழி
சொல்லிட வில்லை; ஆனால்
வெள்ளரிப் பழத்தைப் பிட்டு
வைத்ததாய் முகத்தைக் கொண்ட
நல்லெழிற் றலைவி நண்ணி,
''நன்றி''யென் றுரைத்தாள், செம்மல்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நோக்கினான் அவளை அன்னாள்
நோக்கிட வில்லை ஏனோ?
பூக்குழல் பற்றி நின்று
பூமியைப் பார்த்தோ ளாக;
ஊக்கிட நெஞ்சம் பேச
உணர்ச்சியு மோங்க தேனைத்
தேக்குநல் இதழ சைத்தாள்;
தீர்க்கமாய் விளங்க வில்லை.

''உதவியை மறவோம் உங்கள்
ஊரேதோ பெயரும் நல்ல
பதவியும் அறியோம்?'' என்று
பாங்கியர் கூறச் சிந்தை
சிதைவிலான் சிரித்து, ''வீரஞ்
செறிந்தநற் துருக்கிச் சேனைக்
கதிபதி தானே'' என்று
அறைந்தனன், அசந்து போனார்.

''எதிரியோ'' வென்றாள், உள்ளில்
இளமன மொடிந்து போக,
அதிர்வினால் அசைத லின்றி
ஆங்கொரு சிலையாய் நிற்க;
நதியென எண்ணம் பாய்ந்து
நற்கருத் தொன்றைக் காட்டிப்
புதியவன் பண்பைக் கூறப்
புன்னகை சிந்தச் செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவன் சிரித்து மெல்ல
காரிகை முகத்தை நோக்கி,
''நன்றுநீர் செல்க'', வென்று
நடத்தினான் குதிரை; ஆங்கே
சென்றவன் அகலு மட்டும்
சிலையென நின்றாள் அந்த
வண்டெனுங் கண்ணாள், தோழி
''வா''வென அழைத்துப் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் நனவும்

வானகத்துப் பூக்களுடன் மலர்ந்த திங்கள்
வையகத்தி னிருள்நிலையை மாய்த்து நிற்க;
கானகத்தி னுயிரினமும் உறங்கலாச்சு
கண்மூடி அவனுள்ளம் உறங்கவில்லை.

கண்தேக்கிக் கொணர்ந்தவளின் உருவையுள்ளக்
கதவத்தில் கிறுக்கினான் ஆடலானாள்,
மின்வெட்டி மறைந்ததென மறைந்தாள்மீண்டும்
விரைந்தங்கே தோன்றியதும் களிக்கலானான்.

சிறுபொழுதில் அவளழகாம் ஆட்டம்நிற்க;
சிதைவுற்றான்; கனவுநிலை சிதறலாச்சு;
பிரிவுற்ற மனமவளைத் தேடியோடப்
பிடித்திழுக்க ஓடுகிறான், விழித்துக்கொண்டான்.

நிலாக்கதிர்கள் அவனுடலைத் தழுவிநிற்க;
நினைவாற்றின் கொதிப்பினிலே தவிக்கலானான்;
பலாச்சுளையென் உடலழகு பருவங்காட்டிப்
பல்லெண்ணக் குவைக்கணையாற் றாக்கலாச்சு.

புரியாத வேதனையுட் புகுந்துதீயிற்
புழுவாகத் துடித்திட்டான் பொறுமையின்றி
விரியாத கதிரிதழை விரித்துப்பூமி
விடிவடையச் செய்திடவும் எண்ணலானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவெளி நோக்கினான் வளர்ந்துசெல்லும்
வற்றாத மோனத்தின் ஆட்சிசூழ
சந்தமதி தாய்நீந்த மடியில் சாய்ந்து
தளதளக்கும் மேனுடையாள் துயிலக்கண்டான்.

நிலவுக்கு இவனென்னமுறையோ? என்று
நெஞ்சத்தில் ஓரெண்ண முந்திப்பாய;
களவியலைக் கண்டதுபோல் ஓடிச்சென்று
கார்முகிலென் திரையிழுத்தாள் நிலவுமங்கை.

''கார்முகிலே நீதொலைக கருமைப்புள்ளிக்
கறைகொண்ட நிலவேநீ மாள்க'', வென்று
பார்வேங்கை சபித்தவனாய் உள்ளேவந்தான்;
படுக்கையவன் நிலைகண்டு சிரிக்கலாச்சு.

பட்டமரம் வீழ்ந்ததென வீழ்ந்தான்பாஹிம்
படுக்கைதனில்; நெஞ்சந்தான் பாறைக்கல்லாய்
இட்டகனந் தாங்கவுடல் இளவல்சற்று
இரவுத்தாய் தாலாட்டில் மயங்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிரவுக் கள்ளி !

முக்காட் டிருட் குகைக்குள்
முகமதி மூடி நாலா
பக்கமும் விழிகள் வீசிப்
பார்த்தவ ளாய்ந்து ஆய்ந்து
கொக்கெனக் கூனி வந்தாள்
குறுநடை யிட்டு அந்தத்
திக்கெலாம் புகழ் மணக்குந்
திருமகன் காண வென்று.

பூனைபோல் வந்தாள் மென்மைப்
பொன்மலர்ப் பாதம் நோவ,
தானையும் உறங்கக் கண்டு
தளர்ந்தனள் சற்றே; ஆனால்
ஏனையோ துணையாய் வந்து
''ஏகுக'' வென்று கேட்க
வீணை தானழி குரலாள்
விரைந்துள்ளே புக்க லானாள்.

சித்திர முதிரைத் துண்டம்
சாய்த்தங்கு போட்ட தென்ன
நித்திரை கொண்டான்; மங்கை
நிலத்தினிற் குந்தி நல்ல
வித்தகன் மேனி யெல்லாம்
விகசித்த தேமல் தன்னைக்
குத்துவேல் விழிக ளாலே
கூர்ந்தவள் எண்ண லானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமோ கடந்த தங்கே
நினைத்தனள் எழுப்ப; நெஞ்சப்
பாரமோ கூடக் கைகாற்
பதுங்கின; உள்ளந் தானுஞ்
சோரவே வெண்ணுடல் நடுங்கச்
சொரிந்தது வியர்வை; ஓட
ஓரமாய் நகர்ந்தாள்; ஏதோ
உருண்டது காலிற் பட்டு.

திடுக்கத்தோ டெழுந்தான் பாஹிம்
திடன்வரைத் தோளும் விம்மப்
படுக்கையிற் கிடந்த வாளைப்
பற்றியே பாய்ந்தான்; முன்னால்
அடுக்களைப் பூனை போல
அரவமே யின்றி நின்றாள்
நடுக்கத் தோடுடல் துடிக்க
நானிலங் கிறுக லாச்சு.

முன்னிய வீரன் போர்த்த
முகத்திரை இழுத்தா னென்ன
வெண்ணிலா வானை விட்டு
வீழ்ந்ததோ! இல்லை வேறு
பொன்னொளிர்க் குழம்பு தானும்
பூத்ததோ புவியில் என்று
எண்ணினான் எண்ண மெல்லாம்
எரிந்தது கோபத் தீயால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாரடி கள்ளி நீஇவ்
யாமமே வந்தாய் ஏனோ?
கூறடி'', என்றான் பாஹிம்
குரலினிற் கடுமை சொட்டப்
பேரிடி யோசை நெஞ்சைப்
பிளவுறச் செய்ய; நங்கை
ஓரடி எடுத்தாளோட
ஓர்மையன் பிடித்துக் கொண்டான்.

கைதனிற் பட்ட மானாய்க்
காரிகை பின்னாற் செல்ல;
மெய்வலிப் பாஹிம் உள்ளில்
மேவுநல் ஒளியின் முன்னே;
தையலை இழுத்து வந்து
தாங்கினன் முகத்தை நெஞ்சம்
''ஐயையோ கொடுமை'', யென்று
ஆர்ப்பது போல் உணர்ந்தான்.

நடுநிசி தன்னில் இந்த
நங்கை ஏன்வந் தாளென்ன
படுசெயல் பாவை இங்கு
பதுங்கிய தேனோ? அந்தக்
கொடுநிலைக் கயவன் மீண்டும்
கொடுமைக ளிழைக்க விங்கு
விடுதலை கேட்டோ வந்தாள்,
விளங்கிடா திணற லானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

உள்ளிலே கேள்வி யூற
உற்றவன் நோக்கி நோக்கி
வெல்லறு மொழியாள் தன்னை
விழுங்குவான் போல நிற்க;
கள்ளூறு மலரென் கண்கள்
கழன்றிட நீரைப் பாவை
சொல்லற; மனத்தின் சோர்வால்
துவண்டுடல் மயங்கிச் சாய்ந்தாள்.

தாங்கினா னன்னான் செம்மை
தளிர்க்கொடி சாய்வாய்; எண்ண
வீங்கலோ குமிழிப் பாங்கில்
விளைந்தழிந் தேக; பாஹிம்
ஏங்கலில் வீழ்ந்தான்; ஆனால்
எதிர்த்ததை மாய்த்து வென்று
பாங்குடன் தூக்கித் தன்னின்
படுக்கையிற் கிடத்தி விட்டான்.

வெட்டிய வாழை யென்ன
வீழ்ந்தவள் கிடக்க; நெஞ்சில்
முட்டிய துயரம் மேவ
முழுநிலா வதனம் பார்த்தே
எட்டியே நின்றான்; அந்த
இளமயில் அறியா ளாக
கட்டிலிற் றுவண்டாள்; நேரங்
கழிவதோ அவன் மாச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்கொள் போக்காற் சில
நிமிடங்கள் கழியக் கட்டில்
ஓரமோ நின்று பாஹிம்
உயரிறை வேண்டி வேண்டிக்
கூரெனும் விழிய சைப்பைக்
கூர்ந்தவன் நோக்க; மனப்
பாரத்தைக் குறைப்பாள் போல
பார்த்தனள் இமை யுடைத்து.

நாணொடு பெண்மை யவள்
நலிவினைப் போக்க; ஏதோ
ஈனமாய்க் கண்டாள் போல
எழுந்தனள் வாரி; முன்னாற்
பானமோ யேந்திப் பாஹிம்
பண்பொடு நீட்டச் செல்வி
வானகம் பார்த்தாள்; மீன்கள்
வாழ்த்துதல் போலுங் கண்டாள்.

வாங்கிய பானம் கையில்;
வார்த்தைக ளாட வில்லை;
தேங்கிய எண்ணக் கோவை
சிதைந்தழிந் தேக அன்னாள்
நீங்கவே வழியை ஆய்ந்தாள்;
நீள்நுனி வேலோன் பார்த்து,
''ஏங்குதல் விடுக'', வென்றான்
இளையவள் நோக்க லானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பருகுக நங்காய் ஏனோ
பயப்படு கின்றாய்? இங்கு
வருதலின் போது கொண்ட
வளர்பெருந் துணிபு எங்கே?
ஒருவன்மீ தாணை உன்னை
ஒன்றுமே செய்யேன் இங்கு
இருளினில் வந்த தேனோ?
இயம்புக'', என்றான் நம்பி.

''எனைக்கொலை செய்த லுந்தன்
எண்ணமோ? இல்லை வேறு
துணைக்கெனை வேண்டி மீண்டும்
தொடர்ந்தனை தானோ? இந்தக்
கனக்கூ ரிருளில் வந்த
காரண மறிய லாமோ?
எனக்குரை'', என்றான் வீரன்;
எழில்மகள் துடிக்க லானாள்.

## வேறு

''கொல்லவுமை வந்தேனெனக் கூறலையோ
கொடுமையிது கொடுமையிது வேண்டாம் வேண்டாம்
சொல்லாதீர் என்னிதயம் தாங்கமாட்டா(து)
துயர்நிறைவால் யான்சாதல் உண்மையுண்மை.''
''நள்ளிரவில் உமைக்காண வந்தேனோடி
நாசமிகு எண்ணத்தா லல்லவுங்கள்
வெல்லவொணா வீரத்தைப் போற்றியுள்ளில்
விளையும்பெரு நன்றிசொல''' என்றாள் நங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நன்றிசொலக் களவிலேன் வருதல்வேண்டும்
நானதனை எதிர்பார்ப்பே னென்றா? அல்ல
என்றனது கடமைதனை செய்தேனிங்கு
இரவில்வரத் தகுமாமோ?'' என்றான் பாஹிம்.

''கண்டமுதல் உங்களது எண்ணந்தாக்க;
கண்ணிரண்டும் இமைவரித்து மூடாநிற்க;
நின்றிருந்தேன் வெளியேறி மனமுமோட
நின்நினைவு எனையழைத்து வந்ததிங்கே.''

''தனியொருத்தன் ஒருத்தியுடன் தனித்திருந்தால்
தவறுசெய்ய முன்னிடுவான் சாத்தான், னென்னும்
கனிமொழியார் நபிமணியின் வார்த்தைதன்னைக்
கடமையெனக் கொள்கின்ற முஸ்லிம்நாங்கள்.''

''வாலிபத்தின் உணர்ச்சிதனின் துளும்பலெமை
வழிதவறச் செய்திடுதல் இயற்கை; நாங்கள்
வேலியிட்டுக் காத்துநெறி பேணவேண்டும்
விரைந்திடுக நின்வரவை வேண்டே'', னென்றான்.

''வந்ததில்யான் தவறுண்டேல் மன்னித்தென்னை
வழிவிடுக யான்செல்ல, ஆனாலெந்தன்
சிந்தைதனை உமதெண்ணம் தீண்டாநிற்கச்
செயலளிப்பீர்; அஃதின்றேல் சாதலுண்மை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றிரந்து மயில்நடனச் செல்விசீலை
இழுத்துமுக மதிமறைத்தே ஓடிக்கண்கள்
கொன்றுகுவி இருளினிலே இருளாய்ப்போனாள்;
கூர்வேலன் கண்துரத்திப் பின்னாற்செல்ல.

செல்கின்ற அவள்வழியைப் பார்த்தான்செல்வன்
சில்லடிகள் பருவத்தின் பூப்பைக்காட்டிக்
கொல்கின்ற உணர்ச்சிதனை ஊக்கமனக்
கொதிப்பிருந்தும் மனவுறுதி தளர்ந்தானில்லை.

கனவொன்று கலைந்ததெனப் பாஹிம்மீண்டுங்
கடிநடையிற் படுக்கைதனை நாடிச்செல்ல
இனமறியாப் புத்துணர்வு எழவேயுள்ளில்
இமைமூடா தவனினிமை காணலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவையர் கிண்டலும் புள்ளிமான் சீற்றலும்

தள்ளாடித் தள்ளாடித் தளிர்க்கொடியாள்
தனையிழந்து தவிப்புப் பொங்க;
மெல்லவொரு அடியூன்றி மேவுமடி
நிலையழிய மெதுவாய் வந்து;
உள்ளேறிப் படுக்கைதனில் உறுதுன்பச்
சிலையாகச் சாய்ந்தாள்; ஆனாற்
கள்ளொழுகு மலர்ப்பரப்பு கடிகூருக்
கல்லாகக் குத்தக் கண்டாள்.

எழுந்தோடி வந்துவெண் எழுவானைப்
பார்க்கின்றாள் இருள் வெடித்து
குழந்தைமுகத் தினபதியுங் குவலயத்திற்
கொலுவேோச்ச எழுதல் கண்டு
அழுந்தலுறு இராத்தொல்லை அகலமன
வுறுதிதனை அழைத்து நிற்க;
விழுந்தோடி வந்தஎழிற் சேடியர்கள்
விஷமத்தில் இறங்கி விட்டார்.

அலைகூந்தர்க் கலைவேனோ? ஆ, இவளின்
இதழ்ச்செம்மை எங்கே? கன்னக்
குழிமூடிப் போச்சுதடி கூர்முக்கின்
சுவைநிறைப்போ? என்றே அந்த
நிலையோரம் நின்றவொரு நீள்சேடி
கூறிவிழி சிமிட்டக் குப்பல்
கலகலெனச் சிரித்தாடிக் களிக்கின்றார்
அவள்நெஞ்சம் குமுற லாச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்துக் கோரிரவு இனித்ததடி
என்றொருத்தி பாடலானாள்;
நின்றிருந்தோ ரிசைபெருக்கி ஆடுகிறார்
நிலையழிந்து நின்ற நல்லாள்;
''கொன்றிடுங்கள் எனையேனோ குற்றுயிராய்
ஆக்குகின்றீர்'', என்று சீறும்
வண்டாடுங் கண்ணாளின் வார்த்தைவெடி
கேட்டதுமே அதிர்ந்து போனார்.

சேடியரும் வாயடக்கிச் செல்விமுகம்
பார்த்திடவே, முன்னி வந்து,
''பாடியேநீர் மாய்க்கின்றீர் படும்பாடு
போது'', மெனச்சொல்லி, முகம்
வாடியதன் கருத்துரைக்க ''வழிசமைப்போம்
வாரு'', மெனச் சேடியாரும்
கூடியவர் ஓடுகிறார் குயில்மொழியாள்
கூட்டியெழிற் சோலை நோக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டலும் வெறுப்பும்

காலையதன் கடன்முடித் தெழுந்தார்வீரர்;
கண்சிவக்க முன்னின்றான்பாஹிம்; ஒள்ளும்
வேலெடுத்தார் வீரர்சிலர் வாளுங்கொண்டார்;
வெற்றியெனக் காலுதைத்துப் புரவிநிற்க.

''பொறுமை'' எனும் மொழிபிறக்கப் பார்த்தார்வீரர்
பொன்மேனி மன்னவனும் முன்னிவந்து,
'' இறுதியுரை யாமனுப்பச் செய்வோம் மாற்றான்
ஏற்றதனைச் செவிமடுத்தாற் போரொழிப்போம்.''

எனவோதி மன்னவனும் நின்றான்; ஆங்கே
எழுந்தொருநல் லிளவீரன் சொல்வான் ''வேண்டாம்
சினமேவு எதிரியெமைப் பயந்தோரென்று
சொல்லவழி வகுத்துவிடும் ஈதுவன்றோ?''

''சென்றவனைக் கொன்றொழித்துச் செகத்திலெங்கள்
'தீன்'கொடியை நாட்டிடுவோம்; இல்லையென்றால்
வந்துவிழும் எமக்கீனம்'', என்றான்; மன்னன்
வளர்வீரன் தோள்தட்டிப் புகழ்ந்துசொல்வான்.

''பணிவுதனைக் கொண்டிடுவீர் ஆனாலிந்தப்
பாரிகழுங் கோழையென வாழ்ந்திடாதீர்;
எணவுரைத்த நபிமொழியை மறந்தாவிட்டீர்?
எம்மவர்கள் கோழையில கமான்கொண்டோர்;''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக்கூறி மன்னனவன் உள்ளேசென்றான்;
ஏற்றவர்போல் தலையசைத்து வீரர்நின்றார்;
கனவோர்மைப் பாஹிமொரு தூதன்வீரக்
கரங்களிலே ஓரோலை கொடுத்துசென்றான்.

பெற்றவனும் நெஞ்சினிலே வீரமாடப்
பெரும்புரவி தனிலோடிப் பாய்ந்துஏறி
உற்றவரை மற்றவரை நோக்கலானான்
உயரிறையின் நாமத்தை யுரைத்தாரன்னார்.

காற்றாகப் பறந்துபெரு உரோமனஸின்
கரங்களிலே ஓலைதனை நீட்டிவிட்டு;
மாற்றானின் நல்லுரையை வேண்டிநின்றான்,
மதியற்றோன் கலகலெனச் சிரித்துச் சொல்வான்.

''தோற்பவரைக் களத்தினிலே காண்போம்நாளை
சொல்லுனது மிலேச்சனுக்கு நியதியேற்பின்
போற்றலுறு 'ரெயின்' நகருங் கோட்டைகளும்
புகலிடமாய் நான்கொள்ளத் தருதல்வேண்டும்.''

கர்வத்தால் மனதிலெழப் புன்மை, அற்பக்
களிப்பதனால் ஏதேதோ புகன்றான் நெஞ்சம்
பொருமலுற வீரத்தின் பொங்க லோங்கப்
பொறுப்புணர்ந்து தூதுவனும் அடக்கிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிதல்வருங் காலைமதி கெடுதலென்ன,
அவியமுனம் சுடரொளிதான் வீங்கலென்ன,
பழியணைப்போன் பதறுகிறான் என்றோரெண்ணம்
படமெடுக்க உளமதிலே தூதன்நின்றான்.

வெல்லத்தைக் கடித்துருசி கண்டானொப்ப
விறல்தூதன் நாக்கடித்துக் கொண்டான்; ஆழப்
பள்ளங்கள் முகடணையத் துகளுமாக்கிப்
பரியதனை யோட்டுகிறான் பாய்ந்துபாய்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

# தானை எழுந்தது! தடையுமொழிந்தது!

தூதனின் வார்த்தை நெஞ்சுள்
'சுர்'எனத் தைக்கப் பாஹிம்
''பாதகன் ஒழிந்தான்'' என்று
பகர்ந்தனன்; முன்னி யன்புச்
சீதள மோங்குங் கண்ணான்
செயலரி வீர மன்னன்
''நாதனல் லன்போன் எம்பால்
நல்லருள் பொழிக'' வென்றான்.

ஆர்த்தனர் 'ஆமீன்' ஓங்கி
அசைந்திட வானம் ஆங்கு
கோர்த்தனர் கவசம்; வீரர்
கொண்டனர் வில்லும் வாளும்;
சேர்த்தனர் அம்பு தண்டம்
சேர்ந்தனர் ஒன்றாய்க் கூடி;
பார்த்தனன் வெய்யோன் காந்தி
பாவித்து வாழ்த்தி நின்றான்.

''அன்பினால் வெற்றி கொள்ளும்
ஆசையி லாழ்ந்தோம் மாற்றான்
வன்பினிற் றிளைத்தான் எங்கள்
வழியினிற் பாவஞ் சேரா;
பண்பொடு பொருதி யந்த
பகைவனின் அம்பைத் தாங்க
நண்பரே உறுதி கொள்வீர்
நாசமோ செய்தி டாதீர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெற்றியில் ஆசை வேண்டாம்
வீரமே போதும்; ஈமான்
பற்றிய பேர்க ளென்ற
பாங்கினிற் பொருதி; அன்பு
முற்றிய நாயன், கோமான்
முழுநிலா வழைத்த தூதர்
பற்றிய வெற்றி நாமும்
பழுதிலா தடையச் செய்வோம்.''

''நம்பிநீர் செல்வீ ரெங்கள்
நாயனை; ஏதுந் தீய
வம்பினில் இறங்கி டாதீர்;
வசையது, குற்றம், நெஞ்சத்
தெம்பிலார் செல்க, என்னைச்
சேர்ந்திட வேண்டாம்; செற்றார்
கும்பலை ஒழித்தே தீர்வேன்
குறைவிலா இறைமீ தாணை''

''மரணமாய்ப் போனா லிந்த
மண்ணிலே அடக்கஞ் செய்வீர்;
திறனிலா ரென்ற வார்த்தை
தீண்டலை வேண்டே னுங்கள்
புரவியைச் சாடீர்; 'தக்பீர்'
புவிதனை அதிரச் சொல்வீர்;
விறல்தரு ஒற்று மையை
வேண்டுவேன் அஃதே கொள்வீர்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிய மன்னன் தீரம்
ஓங்குநற் படையைப் பார்த்தான்;
நீதிமெய்ப் புதல்வர் வீரர்
நெஞ்சினி லுறுதி பூண்டு
போதனை ஏற்றா ராங்கு
பொழுதெனுங் கோனைப் பார்த்து,
"சாதனை புரிவோம்", என்றார்
"சரி"என மன்னன் புக்கான்.

வெள்ளுடை யுடுத்து நல்ல
வாசனை தடவிக் கொற்றோன்
வில்லொடு வாளுங் கொண்டு
விரைந்திட நின்றான்; பாஹிம்
உள்ளம்மெய் பதற ஆங்கேன்
ஒருதிசை நோக்கு கின்றான்;
வெல்லலில் மன்னன் சென்று
வினாவிடச் சொல்ல லானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

''வேவறிந்து மாற்றானின் வீரங்கண்டு
விடியுமுனம் வந்திடுவேன்'' என்றுசென்ற
தாவுபரி வீரனையான் காணாமையாற்
தவிக்கின்றேன்; வருமளவும் தாமதிப்போம்''.

என்றோதி முடிக்கவில எதிர்த்திசையில்
எழுகின்ற புழுதிதனைப் பாஹிம்கண்டு,
''நன்றவனும் வந்துவிட்டான்'' என்றானானால்
நல்வீரன் நெருங்கியதும் அசந்துபோனான்.

உள்ளத்தைப் பறித்தோடி விட்டமங்கை
ஊரசந்து தூங்குங்கால் வந்தகள்ளி
கள்மொழியால் தனைவென்றாள் வந்ததென்ன
காரணத்தை அறியாமற் றயங்கிநின்றான்.

வந்தவளும் மன்னவனைக் கண்டுமிக்க,
மரியாதை செய்தோளாய்ப்பணிந்து; சின்னத்
துண்டொன்றைக் கையளித்தாள்; பாஹிம்பெற்றான்
துள்ளியவள் ஓடுகிறாள் பரியிலேறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

''துன்னலர் நடுங்கு வீரா,
தூயமெய் வேத மன்னா,
பொன்னெழில் வீரன் உங்கள்
பொறியினிற் பட்ட மானாய்,
சென்னியிற் காயம் பட்டுச்
சிறையினிற் கிடக்கின்றான்; நும்
அண்ணலர் படையை மாய்க்க
ஆழ்குழி மண்ணில் உண்டு.

''செந்நிறச் சீலை செல்லுந்
திசையினிற் காணின் நீங்கள்
புன்வழி அஃதாய்க் கொள்வீர்
பூத்திட வெற்றி நும்பால்,''
தன்னகங் கவர்ந்தாள் தந்த
தகைமிகு ஓலை சாற்ற;
மன்னிய வீரத் தோளன்
மயங்கலும் மகிழ்வு முற்றான்.

அதிசயஞ் சூழ வேந்தன்
''ஆரிவள்'' என்றான்; பாஹிம்
பதில்சொல நினைத்தான் ஏதோ
பறித்தது நினைவை; ''எம்பால்
கதித்ததால் அன்பு வந்த
காரிகை போலும்'', என்றான்;
விதித்தனன் ஆக்ஞை மன்னன்
விரைந்தது தானை துள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறியிலாக் காதல்

கண்குவளை இதழணைக்க வில்லைநெஞ்சக்
கனச்சுமையால் தனையிழந்த கன்னி, மஞ்சந்
தன்துணையாய் விரித்துடலைச் சாய்த்துநீண்டு
தார்வீரன் பாஹிம்கான் நினைவிலாழ்ந்தாள்.

காதற்றீ பட்டுமனங் கலங்க; மேனிக்
கதகதப்பால் மெய்நிமிர்த்தி சோம்பல் விட்டு;
சோதிக்கண் இமைமூடத் துயின்றாள், நங்கை
துலங்குமிளப் பருவத்துக் கனவி லாழ்ந்து.

செந்தாளைப் பெயர்த்துமலர்ப் பந்தெறிந்து
சேரவுயிர்த் தோழியரும் ஆடுகின்றாள்;
கண்டவர்கள் மெய்மறந்து நின்றார்; இன்பக்
கலைஉலகில் வடிவெடுத்து வந்ததென்ன!

வானகத்துமதி, உடுக்கள் வந்தோபூமி
வளைந்தாடுங் காட்சியிதோ; இல்லைவேறு
கானகத்தின் மயில்நடனக் காட்சிதானோ?
கண்ணளக்க அவராடி மகிழுகின்றார்!

கண்ணாட, மனமாடக் காண்போர்மேனி
களித்தாட, பந்தாடுங் கன்னிபோர்த்த
பொன்னாடை காற்றாடப் பூவுமாடப்
பூமியுருள் பந்தெடுக்க ஓடுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியவள் மோதுண்டுநிமிர்ந்தாள்; முன்னால்
ஊருறவோ அறியாமல் உள்ளத்தோடு
கூடிவிளை யாடுமகன் நிற்கக்கண்டு;
குனிந்துதலை ஓடஅவள் பின்னாற்சென்றான்.

PUBLIC LIBRARY
KALMUNAI

வந்தவனும்வாசல்வரை நின்றான்; கன்னி
''வாருங்கள்'', என்றழைத்தாள்; வந்தானில்லை;
சென்றழைத்து வரமனதுந் துடித்துநிற்க
சேர்ந்தபெரு நாணந்தான் தடுத்ததங்கே!

நாவோதை அன்புமதுப் போதையீந்தும்
நகராமை கண்டுமனம் நொந்துநங்கை;
.''ஏவாத மனமென்ன கல்லோ'' வென்றாள்;
இளவல்சொற் பகராது பின்னும்நின்றாள்.

''ஏனிந்தப் பிடிவாதம் அன்பே வாரீர்;
எனதில்லத் தெளிமைநிலை கண்டோ? வேண்டாம்'',
தேனூற்று மொழியுடையாள் செப்பித் தண்ணார்
செங்கரத்தை நீட்டிடவே பற்றி வந்தான்.

பஞ்சென்ற மலர்க்கரத்தைப் பற்றிநெஞ்சிற்
பாஹிம்கான் அமுக்குகிறான் மனந்துடித்து,
நஞ்சென்று கத்தியது; நங்கைஎங்கே
நல்லுணர்வில் அங்குற்றாள் நாதங்கேட்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தின் வலிமையினாற் பாதம்மட்டும்
பாதைதனை முன்குறுக்க, இடையணைத்துக்
கலக்கற்ற உறுதிமனத் தானையுள்ளே
கரும்புமொழிக் காரிகையும் அழைத்துவந்தாள்.

மஞ்சத்தில் இருத்தியெதிர் மூலைநின்று
மலர்விழியாற் கணைதொடுக்கப் பாஹிம்சோர்ந்து
தஞ்சமெனச் சாய்வுற்றான்; தாகந்தீர்க்கத்
தளிர்க்கொடியாள் அமுதேந்தி ஓடிவந்தாள்.

ஆசைவெறி யுட்புகுந்து அழுத்த; மென்மை
அரவணைப்பிற் றமைமறந்து கிடந்தார்; நெஞ்சம்
நாசமென வெளியேறி ஓடியங்கே
நலிவுற்று ஏங்கியது அறியார்போலும்!

கண்ணோடு கண்ணாட மூக்குமாடக்
கனியிதழிற் சுவையூற்றுக் கன்னலாடப்
பெண்மையுயர் ஆண்மையுடன் பிணைந்துஆடப்
பேசாத உணர்வாங்கே பேசிற்றம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

மறந்தவர் கிடந்தா ரன்பு
மலர்விரிந் தினிமை யூக்க;
திறந்த விண்வெளியில் மீன்கள்
சின்னிமைக் கண்கள் மூடிப்
பறந்தன; இரவு நங்கை
பதுங்கினாள்; பகலோன் முன்ன;
உறைந்தது வெண்மை வானில்
உலகமும் வெளுக்க அந்தோ.

வாளொடு அம்பு ஓர்மை
வளர்வீரக் களத்தில்; கெண்டை
நீள்விழி மாதர் முன்னே
நில்லாது என்பா ரென்ன;
தோள்வலி வீரன் ஆங்கே
துவளலைக் கண்டோ? ''என்ன
பாழ்செயல்'' என்று ஆர்த்துப்
பறவைகள் கூவிற் றம்மா!

பொலபொல வென்று காலை
புலர்ந்தது; நெஞ்சிற் சாய்ந்து
குளுகுளு இன்ப வூற்றிற்
குளித்தவர் எழுந்தார்; வீரன்
வெலவெலத் துள்ளம் நோவ,
''விடிந்ததோ?'' என்றான், கன்னி
சலனமே யின்றிக் ''கங்குல்
சென்றதோ?'' வென்றாள் மெல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரியே எழுந்தான் பாஹிம்
வன்னுடற் றளர்ந்தா னாகக்
காரியற் கூந்த லாங்கே
கலைந்தவள் கிடந்தாள் மான்போற்;
கூரிய பார்வை மீண்டுங்
கொடிமலர் அழகை யுண்ண;
நேரிய உள்ளத் தோழன்
நினைத் தெதோ பதறிநின்றான்.

'அறவழி யிழிந்தாய்' என்றோர்
அரும்பழி அவனைச் சாடி
மறைவழி காட்டி யன்னான்
மனத்தினைக் கலக்கி நிற்க;
'நிறைவழி யிழந்தாள் இந்த
நேரிழைப் பெண்ணே', என்று
புறவழி நாடி யோடிப்
புரவியிற் பாய்ந்தான் துள்ளி.

PUBLIC LIBRARY
KALMUNAI

பறந்தனன் பாஹிம்; மாது
பதறினாள் துயிலு மோட;
விரிந்தன கண்கள்; ''என்ன
விசும்பலோ'', என்றான் பக்கம்
இருந்தவன், ''யாரு எந்தன்
இளவலோ?'' என்றாள். ''ஆமாம்
புரிந்ததோ?'' என்றான் நோக்கிப்
புரிந்தனள் புலியாய் நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீறிநீ சினந்து மென்ன
சிறுத்தையின் கொட்ட மேனோ?
ஆருனக் குதவி, உந்தன்
அன்பினி லாழ்ந்த மாற்றான்
பாரிகழ் தோல்வி கொண்டே
பணிந்தெங்கள் காலில் வீழும்
பேர்புகழ் காட்சி கண்ணின்
பெருவிருந் தாகும் நாளை.

என்றவன் சிரித்தான்; நங்கை
இடிவிழுந் ததிர்ந்தா ளொப்ப
நின்றனள்; வீர மெங்கோ
நிலையழிந் தொழிந்து போக;
''கண்டுநீ மாள வேண்டும்
காறியாம் உமிழ உந்தன்
வண்டுழல் கண்கள் குத்தி
வளருமென் பழியுந் தீர்ப்பேன்.''

''கானகத் திடையில் வீரம்
காட்டிய வீரன் தோல்விப்
பானமும் அருந்தல் உண்மை
பார்த்ததை மகிழ்வோம், அன்புத்
தானமும் இழந்து நீயும்
தவிப்பதைக் கண்டு வீரக்
கோனுடன் நாட்டா ரெல்லாம்
கொல்லெனச் சிரிப்பா'', ரென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமோ நெஞ்சை மாய்க்கப்
பாவியென் செய்துள் ளானோ?
நேசமே கொண்டா லன்றி
நெஞ்சக மாழ்ந்த புன்மை
நாசத்தை அறியோ மென்று
நங்கையு மெண்ணி, நீண்ட
கேசத்தை வருடி மெல்லக்
கிள்ளையாய்ச் சொல்ல லானாள்.

''மாற்றானுக் குள்ள மீந்து
மாசினைக் கொண்டோ னென்று
தூற்றாதீர், வெட்டி யெந்தன்
துடியுடை இதயம் பாரும்;
ஆற்றுநீ ராக வோடும்
அன்பது யாருக் கென்று
பார்த்ததைச் சொல்வீர்; வாளைப்
பாச்சு வீ''ரென் றடுத்தாள்.

''என்னைநீ ஏய்த்துப் போக்க
எத்தனிக் காதே, வுந்தன்
பண்ணொலி கேளேன் மங்காய்;
பழிதனை விடவும் மாட்டேன்;
அன்னியன் கையால் என்னை
அடித்திடச் செய்தாய், அந்தத்
துன்னலன் மார்பு டைக்க
துணிந்தனன் சோரே னுள்ளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நினைத்தது வொன்று ஆனால்
நடந்தது வேறு அன்பா,
தினைத்துளி தானுங் கேடு
செய்திட எண்ண வில்லை,
பிணைத்திடு மச்சம் நாணம்
பீறிடல் போலுங் காட்டி;
இணைந்திடுந் தோழி போக்க
எண்ணியே கூச்ச லிட்டேன்''.

''வேற்றானுக் குதவேன் அந்த
வாளினைத் தாரீர்; சென்று
கீற்றென மார்பைக் குத்தி
கீழ்மகன் சிரசைக் கொய்து,
போற்றிடக் கோவின் முன்னே
பூவெனச் சாத்த; என்முன்
போற்றுதல் விடுக அன்னான்,
பொறுக்கா தென்னுள்ளம் மாளும்.

''கேளறு வசைகள் கேட்டுக்
கீழ்த்தர முற்றோ இங்கு
வாழநீ படைத்தாய் என்னை
வளாருள் இறையே? இன்றே
மீளிலாத் துயிலில் ஆழ்த்தி
விடிவெனக் கீவாய் இந்தப்
பாழ்கொடும் பழியை விட்டும்
பரமனே'', என்றாள்; பாய்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி யோர்வா ளெடுத்துத்
துவளிடை தாங்கு நெஞ்சிற்
றள்ளிக் கூரேற்ற மங்கை
தளிர்க்கரம் முனைய; நீண்ட
வெள்ளிவா ளுறையான் ஓடி
விலக்கியே, ''யாது செய்யக்
கள்ளிநீ முனைந்தாய் எந்தன்
கடமைசெய் மனங் கவர்ந்தோய்''.

''பெண்ணுள மறியா வெற்றுப்
பேயனாய் இருந்தேன்; உள்ளக்
கண்களைத் திறந்தாய்; என்றன்
கனிமொழி மானே, என்றும்
உன்னுடல் தீண்டேன் என்னின்
உரியவ ளாக்கு முன்னே;
பொன்மலர் சாத்து மெங்கள்
புகழுடை கடவுள் ஆணை''.

சத்தியஞ் செய்யக் கஞ்சன்
தன்வழி வந்தா னென்ன;
நித்தியன் போற்ற வுள்ளம்
நிறைத்துப் பொன்திட்டந் தாங்கி
உத்தமன் காப்பே னிந்த
உலுத்தனைத் தொலைப்பே னென்று
சத்தமில் உறுதி பூண்டு
தன்வச மாக்க லானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னகம் வந்த தாங்கள்
இன்சுவை யருந்தல் கண்டு
பெண்ணுளம் மகிழும் நல்ல
பேற்றினைத் தாரீர்'', என்று
நன்வெறி மதுவை யூற்றி
நங்கையும் நீட்ட, அந்தச்
சின்மனங் கொண்டோன் வாங்கிச்
சுவைத்ததை உறுஞ்ச லானான்.

PUBLIC LIBRARY
KALMUNAI

மதுவுடல் ஏறி யேறி
மதிதனை மாய்க்க; வீணன்
புதுநிலை யுற்றான்; வாயாற்
புகல்வதை அறியா னாக;
இதுநனி சமய மென்று
இனியவ ளண்டி மெல்ல,
''சதியெதைக் கொண்டீர் அன்னான்
சாவுற,'' கேட்டு நின்றாள்.

என்றவள் மேனி தொட்டு
இருந்தவன் பக்கம் சாய்ந்து,
''குன்றிணை மார்போ சொல்வீர்
கூடியான் பங்கு கொண்டு
வென்றவன் எதிர்ப்பை மாய்த்து
விறல்தனைக் காட்ட வென்றும்
இன்றல்லோ சமய'', மென்று
இன்முகங் காட்டச் செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிலை இழந்தோ னன்புத்
தளிர்க்கொடி கேட்க, நோக்கும்
பின்நிலை யறியான் உண்மை
பிதற்றினான்,'' கேளாய் மாதே,
மண்ணிலே அகழி வெட்டி
மறைத்ததைப் பூமி யாக்கிச்
சின்னிலைச் சிறியோன் வீழச்
செய்துளேன் வீழ்வான் நாளை.''

இலக்கிட மறிந்தாள் நங்கை
இழிநிலை கொண்டோன் வரயாற்
றுலக்கிடத் துப்பை யுள்ளந்
துடித்தது; ஓர்மை யோங்க
விலக்கினாள் செல்லல்; மிஞ்சு
வெறியனின் இருப்பால்; மெள்ளக்
கிழக்கினில் வெளுப்புத் தோன்றக்
கீழ்மகன் போக்கா நின்றாள்.

கிளர்ந்தெழு வெளுப்பா லெங்கும்
கிள்ளைநற் புட்கள் சேர்ந்து
எழுந்தன இசைகள் மீட்டி;
இரவது விடையுங் கொள்ள;
விழுந்தவன் வலையில், ''அன்ப,
விடிந்ததோ'', வென்றான், ''ஆமாம்
நிலந்தெளி முன்பே செல்வீர்
நீள்நில மாந்தர் காண்முன்.''

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்புத் துலக்கினாள்

துடித்தவ ளோட; மங்கை
'தூ'வென இழிவாய்ச் செப்பி
உடுத்தனள் ஆடை ஆணின்
உருமிகு பாங்கில்; தாவிப்
பிடித்தனள் பரியை ஆர்த்துப்
பேரிறை வாழ்த்த வுள்ளம்;
எடுத்தனள் சவுக்கை வாசு
எதிர்த்தன வொடித்துப் பாய.

காற்றெனப் பறந்தாள் நங்கை
காலைநல் வேளை தன்னில்;
பார்த்தனன் வெய்யோன் கண்கள்
பாவையும் நோவா ளென்று
போர்த்தினன் முகிலாற் றன்னை
புவியெலாம் மங்க லாகச்,
சேர்த்தது தென்றல் தண்மை
தேவியுஞ் சோரா(து) செல்ல.

வழியெலாம் விழிகள் தேடி
வாசுவின் வேகங் கூட்டிக்
குழிதனைத் தேடிக் கண்டு
குறித்தொரு மதிப்பும் வைத்து
களிதர வுள்ளம் அந்தக்
காமுகன் தொலைப்பே னென்று
பழியிலாப் பாஹிம் நாடிப்
பறந்தவ ளோடு கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளுங் கோவும் முல்லைக் கொடியும்

அணிகொண்ட தானைகளைப் பார்த்துநின்று
அகமகிழ்ந்த உரோமனஸூம் அண்டியாங்கே
பணிதூக்கும் மாதர்களைப் பார்த்தான், நல்ல
பருவத்து எழிலாடும் பாவைகண்டான்.

கண்டான்கண் ணிமையிரண்டும் ஆட்டங்காட்ட
கடிமின்னின் தாக்கலினா லசைந்தான்போல
நின்றான், பெண் யாரென்று இதயங்கேட்க;
நினைவறிந்தாள் போலொருத்தி சொல்லலானாள்.

''முன்புபணி புரிந்தபெண் மாக்கிரட்டின்
மூத்தமகள் பிலோமினாவே; இன்றுளங்கள்
வன்புடைக்கச் செல்லுபடை பணிகளாற்ற
வந்தெம்மைச் சேர்ந்தபெரு வீரச்செல்வி''.

எனவோதக் கேட்டரசன் முறுவலித்தான்;
இளையவளும் இதழுடைத்துச் சிரிப்புதிர்த்தாள்;
மனமறியாக் காதலனும் முன்னிவந்து
மங்கைதனின் நற்பண்பு சொல்லலானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடாப்பாற் குவளைதனில் மூழ்குவண்டாய்
மூடுமிமைக் குள்ளாடும் கண்ணாள்; நெஞ்சுள்
வாடாப்பொன் வாகையெந்தன் வேங்கைக்கென்றே
வாழ்த்திக்கோன் முகமலர வணக்கஞ்செய்தாள்.

மென்தென்றற் றாங்காப்பொன் கொடிநிகர்த்த
மெல்லிடையாள் வளைந்தரசைத் துதிக்க; மன்னன்
கண்ணோடித் தாங்கியதே காதல்மாதின்
கனிவெளியாம் இடையொடிந்து போகுமென்று.

வெஞ்சினத்து மன்னன்நல் லாசிகூறி
விடைகொண்டு அகல்வேற்க; வீரமங்கை
பஞ்சடுத்த மலர்ப்பாதத் தடிபெயர்த்துப்
பெருக்கிப்புண் நாவுதிர்த்த உள்ளேசென்றாள்.

நீள்கதவின் நிலைசாய்ந்து நின்றாள்கன்னி;
நினைவலைகள் பாஹிம்தனைக் கொணர்ந்துகாட்ட;
ஆளுணர்வு அறச்செல்வி ஆய்ந்தாளாங்கே
ஆணழகன் மார்புள்ளே அவளைக்கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்திலே ஒரு களம்!

களம்நோக்கி வருகின்றான்காளை; நங்கை
கனவோர்மை யுள்ளத்துள் காவலாகப்
பழிதீர்க்கத் துணைநல்கிப் பதுங்கிவந்தாள்;
பாஹிம்கான் அறியானோ? பருவக்கூத்து.

உள்ளத்துக் காட்சிநனி காணக்கான
ஊறிவரும் பேரின்பம் உதட்டிலேறி
வெல்லத்துச் சிரிப்பாக நீண்டுஆட
விரைமனத்தாள் தனைமறந்து நின்றாள்நோக்கி.

வீசிப்பொரு வாளொளிதான் மின்னமின்ன;
விறல்தானைப் பொருதுநிலை தோன்றலாச்சு;
பேசுபுகழ் மாதுள்ளத் திரையில்; அன்புப்
பாஹிம்கான் வெற்றிபெறல் போலுங்கண்டாள்.

அன்புக்கு வலைவீசி அலைமகனோ
அண்டித்தன் முன்னின்றும் அறியாளாக;
இன்பத்துச் சுனைமூழ்கி நின்றாள்; அந்த
இழிகாதல் மனநிலையான் தோளைத்தொட்டான்,

சூடாக்கி விட்டதொரு இரும்புத்துண்டாற்
றொட்டதுவாய் உடல்துடித்து நிமிர்ந்தாளந்தக்
கேடான செயலுடையான் கிட்டிவந்தான்;
கிள்ளைநறுஞ் சொல்லழகி தள்ளிநின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பணிகள் ளாற்றுமிள மாதர்கூட்டப்
படைத்தலைவி எனவுன்னை யாக்கியுள்ளான்
சடைவடையாப் பேரரசன் ஏற்பாய்'', என்றான்,
''சந்தோஷம்'' என்றொருநல் வார்த்தைசொன்னாள்

''நான்சூடும் வாகைத்தார் நாளைஎங்கள்
நல்வாழ்வுப் பிணைக்கயிறாய் ஆகவேண்டும்
தேன்தூங்கு மிளமாதே'', என்றான்அன்புச்
செல்விமனம் ''பிணக்கயிறு'' என்றிற்றன்றோ.

வடுவிழியாள் மொழியுதிரா நிற்றல்கண்டு
வளமறியான், ''ஏனன்பே வார்த்தைமாய்க்கும்
கொடுநிலையும்'', எனக்கேட்க, கொஞ்சுமோதைக்
குரலினியாள் கலகலெனச் சிரித்துச்சொல்வாள்.

''துள்ளியெழும் இன்பநிலை உள்ளந்தாக்கச்
சோர்வுற்றேன் வார்த்தைகளில்; நாளைநீங்கள்
கள்வழியும் மலர்த்தாரை தாங்கல்தன்னை
கற்பனையிற் கண்டுமனம் மகிழ்ந்திருந்தேன்.''

புகழ்பாடத் திறனறியான் பூரித்துள்ளம்
பூங்கொடியாள் தனைவாழ்த்தி யேக; மெல்ல
''இகழ்வடைவாய்'' என்றோதிச் சிரித்தாள்; முத்து
இகஞ்சொரிந்தாற் போற்பற்கள் தெரியலாச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோன் தடுப்பும் முடியோன் முறைப்பும்

போர்ப்பறை முழங்க உரோம
புகழுறு மன்னன் நின்றான்;
தேர்ப்படை யோடிச் சேர்ந்து
தெருவெலாங் குவிய லாச்சு;
பார்ப்பவர் மயங்கக் காலாட்
படைகளும் நிறைய; அன்பு
ஈர்ப்பவள் இல்லாள் ஏதோ
இழந்தவள் போல நின்றாள்.

கையினிற் றடியும் அன்பு
கனிந்தொழு கண்ணும் நல்ல
மெய்யினிற் றளர்வும் நீண்டு
வெளுறிய தாடி யோடு
பையவே புலவன் நண்ணி
பார்த்தெழில் அரசைச் சொல்வான்,
''உய்வழி வேண்டி னிந்த
உறுபகை விடுவோ மின்றே''

என்றது மெழுந்தான் மன்னன்,
''என்ன நீருளறு கின்றீர்?
உன்றனின் உடற்றான் கேட்டை
உற்றது என்றா ் மூளை
நன்றல்லப் போலும்? இங்கு
யானெதுங் கேட்கேன் போம்போம்,
வென்றுநான் வருவேன், அன்றேல்
வீரத்தின் மரணங் கொள்வேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாசுநல் படைக ளோடி
வந்தெமைச் சேரு முன்னே
கூசிடா(து) படைக ளோட்டல்
கூடுமோ? என்றேன் கேளீர்
பேசுதல் குற்ற மென்றால்
பொறுத்தெனை மன்னித் துங்கள்
ஆசைபோல் நடப்பீ ரீசன்
அளிபயன் கொள்வீ'', ரென்றான்.

நடந்தனன் புலவன் விட்டு;
நகைத்தனன் மன்னன் பார்த்து;
திடனுறு நெஞ்சம் மூச்சாற்
றிரண்டறு மலையாய் மாறப்
படத்தனை விரித்த பாம்பாய்ப்
பரிதனிற் பாய்ந்து செல்ல;
மடைதனை யுடைத்த நீராய்
மனுப்படை சென்றிற் றாங்கே.

வீசிய தென்றல் சீறி
வீங்கிடப் புயலாய், எங்குந்
தூசிகள் சிதற லாச்சு;
சுடரவன் கதிர்க ளோச்சி
மாசினைக் கொள்வார் தம்மை
மடுவினிற் றள்ளுவான் போல்
நீசரின் பின்னால் வெம்மை
நீள்கரம் நீட்டி நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிருறு படைகள்

பட்டவை மண்ணிற் படிந்து மறைந்திடப்
பார்ப்பவர் தன்மனம் பதுங்கி யொடுங்கிட;
நெட்டுறு கொடியெலாம் நின்றே நுடங்கிட;
நினைத்திட முனம்வழி ஓடிக்குறுகிடக்
கொட்டும் பேரிசை மேளமும் ஆர்த்திடக்
'கோ'வென 'ஆ'வென கோசம் முழங்கிடச்
சிட்டுப் பறப்பன போன்று படையினைச்
செலுத்தி நடந்தனன் உரோமத் தளபதி

'அல்லாஹ் பெரியவன்' கோசங்க ளெழுந்தன;
அழகுவெண் பிறைக்கொடி ஆடிப் பறந்தது;
நில்லாப் பரிகளும் நிமிர்ந்து நடந்தன;
நீள்நிண வேலம்பு நின்று ஜொலித்தன;
உள்ளிலே வெற்றி ஊறிப் படிந்திட;
உயர்மறை வார்த்தைகள் ஓங்கி ஒலித்திட;
வெல்லாப் பெருவேங் கைவிண்ணு மதிர்ந்திட
வீரக்குழா மொன்று சூழப் பறந்தனன்.

வெள்ளிப்பூ வானிற் கதிர்கள் சிரித்திட;
வீரவாள் எங்குங் கூடி யொலித்திட;
அல்லிப்பூ ஆம்பல் அகங்கள் நெகிழ்ந்திட;
அரைக்கோளத் தாமரை ஆட்டஞ் செழித்திட;
எல்லை யணுகியும் இறைவழி நாற்படை
எதிரிகள் கண்டிலா தேங்கித் தவிக்கையில்,
துள்ளியே நெருங்கின துலங்குமெய் எதிர்த்திடும்
தூய்மையிற் சேனைகள் 'ஜேகப்' சேரவே.

PUBLIC LIBRARY KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளின் மூச்செதிர் மோதிக் கலந்தது;
படிதுகள் எழுந்துயர் விண்ணை மறைத்தது;
நடையொழித் திருவணி எதிரெதிர் நிற்கவே;
நாற்புறம் ஓர்மையின் நாதமுங் கமழ்ந்தது;
குடைநிழல் விண்தரு கொடுமை குலைத்தது;
கோடையில் இடியென யானைக ளார்த்தன;
நெடுமெய்க் குதிரைகள் நீளொலி காட்டியே
நிண்டிவை குதித்தன நிட்டூரம் போக்கிட.

## வேறு

ஈரிலட்சம் போர்வீரர் எழுதல் கண்டு
இறுமாப்பில் தோய்ந்திருந்தான் உரோமமன்னன்
பார்முழுதும் வெற்றிகொள முடியுமென்ற
பழுதுதரு எண்ணத்தின் தாக்கலாலே.

ஒப்பிட்டால் மூன்றிலொரு பங்கேநாங்கள்
உரோமனஸின் படைகளுக்கு ஏன்றாலென்ன
தப்பித்தான் போய்விடுமோ வாகைசூடல்
சண்டையிலே; என்றிரைந்தார் முஸ்லிம்வீரர்.

சலசலென மழைபொழிதல் போலவாங்கு
சரமாரிப் படைகளொலி எழுப்பித்துள்ள
கலகலெனப் பறந்தனவே கழுகுக்கூட்டம்
கணப்பொழுதிற் றமக்குணவு கிடைக்குமென்றே.

மக்கள்கடல் போற்றெரிந்த படையின்முன்னே
மன்னவனு மேதேதோ சொல்லிநின்றான்;
இக்கரையில் இருத்தவரோ இறையைப்போற்றி
இருகரங்க ளேந்தித்'துவா' கேட்டுநின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவும் முடிவும்

முன்னுறப் படைகள் கண்டும்
மூஸ்லிம் மெய்வீரர் நின்றார்;
பொன்னொளி வேலோன் பாஹிம்
போர்முறை அறிந்தோன் முன்னி;
''பின்னுறச் செல்வீர் நல்ல
பிறைவடி வாக'', வென்று
சொன்னதும் பறந்தார், கேண்மை
துலங்குறு வீரர் கூட்டம்.

எதிர்த்தவ ரோட; உரோமர்
எள்ளியே நகைத்துப் பின்னாற்
கதித்த பொன்வாளைத் தூக்கிக்
கறங்கெனச் சுழற்றி வந்தார்;
விதித்தனன் பாஹிம் ''வட்ட
வடிவினி லாகு'', மென்று
துதித்திறை சூழ லானார்
துன்னலர் திகைத்தா ரன்றோ.

வாளுடன் வாளும் மோத
வளர்பெரு வீரம் மோதத்
தோளுடன் தோளு மோதத்
திரண்டநற் றுடைகள் மோத
ஆளுடன் ஆளும் மோத
அழகொளிர் வேலும் மோதக்
காலுடன் காலு மோதிக்
கரணங்கள் போட்டு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிவாள் செம்மை தூக்க
வேல்நுனி மழுங்கத் தண்டம்
தள்ளிட எதிர்ப்பை; ஈட்டி
தகர்த்தது கவசம்; விஞ்சும்
கொள்ளொளி கதைகள் மாற்றார்
கொடுந்தலை தகர்க்க; சோரி
வெள்ளமாய் ஓட; வீரர்
வெஞ்சமர் செய்து நின்றார்.

வில்லினால் மாய்ந்தார்; நெஞ்சு
விரிந்ததால் மாய்ந்தார்; வேலும்
கல்லிட மாய்ந்தார்; பாரக்
கதையினால் மாய்ந்தார்; வாசின்
துள்ளலால் மாய்ந்தார்; இரத்தஞ்
சோரலால் மாய்ந்தார்; ''கலிமா''
சொல்லியும் மாய்ந்தார்; கண்டோர்
சோர்ந்துடல் வீழ வன்றோ

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

குவித்தினிய முந்திரிகைக் கொட்டைமீது
குறிவைத்துப் பெருங்கல்லால் எறிந்தாப்போல
சவித்திரளாம் துருக்கியரின் தானைத்தாக்கம்
தாங்காது சிதறிடவே உரோமர்கூட்டம்
பவுத்திரமாய்த் தனைக்காக்க உரோமனஸூம்
பறந்தெழிநற் கோட்டையினுற் பதுங்கலானான்;
'மவுத்து' தனைக் கண்டஞ்சா மல்லன்பாஹிம்
மறைகொண்டோர் தனையழைத்துக் கோட்டைபுக்கான்.

திறந்தவழிக் கோட்டையினுள் எதிர்ப்புயின்றித்
'தீன்' கொடியை உயர்த்தியிள பாஹிம்செல்ல;
மறந்தகர்த்த வீரர்குழாம் 'தக்பீர்' சொல்லி
மளமளென உட்சென்றார்; உரோமனஸூம்
திறனழியத் தாள்பணிந்து சரணமென்றான்;
திகைப்படையாப் படைவீரர் இழுத்துவந்து
அறனோங்கச் செயல்தூக்கும் அர்ஸலானின்
அழகுமிகு முன்னாலே நிறுத்தலானார்.

''மண்டியிடாய்'', என்றாங்கே சொல்லப்பாவம்
மனமொடிந்த உரோமனஸூம் செய்யப்புக்க;
தண்டனையில் மனவின்பந் தேடாநல்லோன்
தகைமிகுந்த அர்ஸலானும் ஓடிவந்து;
'''நண்பனேநீ எதிரியல எழுவாய்,'' என்று
நற்கரங்கள் பற்றியவன் வீரம்போற்றி
''உன்னுடைமை நாடுவுயிர் காத்தலிங்கே
உறுதி'', யெனச் சொல்லவுயர் பண்புகண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UBLIC LIBRARY
KALMUNAI

# முற்றாத முடிவு

கதிருக்கி நிலனாழுங் கதிரோனாங்கே
கண்டந்தச் சண்டை; மனம் களைத்துத்தன்னின்
பதிநோக்கி நகர்வுற்றான், பகலுந்தேய
பணிமுகத்து நிலா, மீன்கள் பவனியேற்கச்
சுதிதூக்கு மிளந்தென்றல் சூழச்சற்று
சோர்வுற்ற மெய்இனிய துயிலைநாடக்
கதிபாரக் கழல்பாஹிம் கிடந்தான்தன்னின்
கடமைநனி முடிந்தமன நிறைவுஞ்சேர.

தீண்டாத நிலாவழகு நிறைக்கச் செம்மை
சேர்கின்ற தாரகைகள் சிரிக்கப் பைங்கொள்
கூண்டாளுங் குருகினங்கள் உறங்கலாச்சு;
'குய்'யொலியிற் சில்வண்டு ரீங்காரிக்க,
மாண்டோரின் உடலுருசி கண்டு மனம்
மகிழ்ந்தாடும் பருந்தெல்லாங் கூத்துப்போட;
நீண்டபகை நெருப்பெடுத்து பாஹிம்கொல்ல
நீள்வேலன் நிறைமதியில் ஜேகப்வந்தான்.

பகையொழித்த நிறைவுடனே படுத்தார், கடும்
பாரத்தைக் கீழிறக்கி வைத்தார்போல;
புகையுருவப் பனிவேறு கூதிர்கூட்ட
புலனனைத்துஞ் செயலறியாப் பாங்கிலாழச்
சிகையறுத்துச் சென்றாலும் தெரியாரந்தச்
செயல்வீரர், எனக்காண்போர் சொல்வார், ஆனாற்
பகைவேறு பழியுருவிற் படத்தைத் தூக்கிப்
பாஹிம்கான் தனைக்கொல்ல வருமென்றெண்ணார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவியவாள் ஒளிசிந்த உள்ளேவந்தான்;
ஊடறுத்துப் பயம்நெஞ்சைத் தாக்கப்பல்லை
நறுவியேவாள் ஓங்கிமுனம் நடந்தான்வெட்ட,
நகர்ந்துவந்த துரதிஷ்டம் அறியான்பாவம்
பொருமியமெய் சோர்தலுறப் பற்றிவாளைப்
புறமுதுகிற் றாக்கமுகந் திருப்பலானான்;
கருவுடையிற் றனைமறைத்த உருவங்கண்டு
கணப்பொழுதில் வாள்பறித்து ஓடலானான்.

பறித்தெடுத்த வாளறுக்க ''ஐயோ''வென்று
பதறியந்த உருவமது மறந்துகத்தப்
பெருத்தபுகழ் பாஹிம்விழி விரியப்பாய்ந்தான்;
பேயறைந்தாற் போற்கன்னி நிற்கக்கண்டு
வெறித்தவனைப் பார்த்தருகே சென்றான்; சின்ன
வெண்டிக்காய் விரலுதிரஞ் சொட்டக்கண்டு,
''அறுத்தவனும் யாரிங்கே ஆரணங்கை
அநியாயம் செய்தவனை விடவும்மாட்டேன்.''

''பெண்ணினத்தை பேணென்னும் பெருமான்வார்த்தை
பேச்சளவிற் கொள்வோரென் படையிருந்தால்
உன்முனமே சிரசறுப்பேன் கூறாய்; அந்த
உலுத்தனையான் விடமாட்டேன்; உயர்கலிமா
சொன்னவினம் பழிதாங்தா(து) சொல்லாய்ஆடித்
துடிக்கிறது என்மனமும்'', என்றான்பாஹிம்
நன்னெறிகொள் மதம்சார்ந்தோன் தன்மைகண்டு
தயந்துமனம் பிலோமினா உண்மைசொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதுந்தன் புயம்விம்ம வெளியேவந்தாள்;
கீழ்மகன்செல் வழியதனைக் காட்டக்கங்குல்
மாட்டேனென நிற்பதுவாய் சூழக்கண்டு
மனந்தளர்ந்து மெய்சோரப் பாஹிம்நிற்க;
பாட்டடுத்த குரலினியாள் பக்கம்வந்து
''பதறாத செயலென்றுஞ் சிதறாதன்ப;
நீட்டருவேல் நுனையவனின் நெஞ்சிற்குத்தி
நின்னெதிரிற் கொணரயான் தவறே''வென்றாள்.

வெட்டுண்ட விரலினுக்கு மருந்துகட்ட
விறல் பாஹிம் பஞ்செடுத்து வந்தான்; மெல்லத்
தொட்டவளின் கைபிடிக்க மின்னின் தாக்கம்
துளைத்துடலைச் செல்வதுவாய்க் குதித்தான்; நல்ல
பட்டென்று மனஞ்சொல்ல பருவத்தாகப்
பாதிப்பாற் றமையிழந்த விழிநீள் இமை
வெட்டாமற் குனிந்துதலை சரிந்துநிற்க,
வியனுலக இருளங்கே தூங்கக்கண்டான்.

உலகறியாப் பருவமதில் உள்ளத்துள்ளே
ஊன்றிவிட்ட மதஞானம் ஓங்கித் ''தன்னை
விலகியதும் சரிதானோ? வேண்டா'' மென்று
விளைத்தொருநல் லுணர்வூக்க பாஹிம்தன்னின்
நிலையறிந்து தனையுணர நெருங்கல்நீக்கி
நின்றவனின் நனிகடமை முடித்து மெல்ல,
''பழிவருமென் றறியாயோ பாவாய்'', என்றான்
பனிமுகத்தாள் விழிசிரிக்கப் பார்த்துச்சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நின்னழிவை யான்வேண்டே நீதனாலன்னோ
நிறைதேவன் எனையனுப்பி வைத்தானிங்கே
உன்மனமும் மறுத்திடுமோ ஓதாய்; அந்த
உலுத்தனுக்கு யான்எமனே என்றும், நீங்கள்
பொன்னொளிரு பதிக்கேகுங் காலை என்னைப்
புறக்கணியா தேற்றிடுக'', வென்றுகேட்க,
என்மனமுந் தூண்டியதால் வந்தேனுங்கள்
இசைவெனக்கு இல்லையெனின் சாவுமாமோ?

கிள்ளைமொழிச் சொல்லிணையாள் கேட்டுநிற்க;
கிளர்சிறைகொள் விழியிரண்டும் நீரைத்தேக்கி
வெள்ளமதில் வீழ்வண்டாய்க் காணப்பாஹிம்
வியந்தவளின் உறுதிதனை உள்ளில், ''அன்ப
கள்ளமிலாப் பேரன்பில் ஆழ்ந்தோம்உண்மைக்
கறைபடியா இறையெம்மைச் சேர்த்தல்வேண்டும்
நல்மனத்தில் நலிளேற்க வேண்டாம்; எங்கள்
நாயன்மீ தானையுனை யேற்பே'', னென்றான்.

நினைவினுக்கு விடையீந்து சிலையாய்நிற்க;
நெஞ்சகத்தி லன்பூறித் தேங்கி யின்பக்
கனவுலகில் மனமாழக் கழுத்தைச்சுற்றி
கதிக்குந்தேன் மலர்மாலை தூக்கிப்பாஹிம்
அணிவித்தான்; அடிபணியக் குனிந்தாள்; தன்னை
அருவீரக் கரமிரண்டு தாங்க, நல்ல
நினைவுக்குத் தனையழைத்து வந்தாள்; நேரில்
நின்றிருக்க வீரமகன் நாணங்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கொத்தைத் தாங்கிநிலை வைத்துவிட்டு
பூவெடித்தாற் போற்சிரிப்பைச் சிந்த; வெட்கத்
தாக்கத்தால் தலைகவிழ்ந்து நின்றாள்; சேந்த
தளிர்க்கரத்துள் முகமறைத்துக் கொள்ளப்பாஹிம்
''பாக்கியந்தான்'' என்றிழுத்து முடியாநிற்க;
''பாவைக்கே'', எனவுரிமை பேசலானாள்;
நோக்கத்தில் இருவர்நிலை ஒன்றேயென்று
நுகர்வதற்கு அவர்சிந்தை நின்றாற்றானே.

வீணைநாண் பிலோமினா நின்றாள்; அந்த
மின்னாடுங் கண்களிலே காதல்தூங்க,
ஏணைக்குள் மதலைதரு குழவியென்ன
எடுத்தணைக்க மனமாசை கொண்டும்பாஹிம்
''சேனைக்குள் காய்த்தகாய் கனியுமுன்னே
தின்பதிலே னவசரமோ? முறையுமில்லை
ஆனைக்கு மடிசறுக்கும் அகல்வாய்'' என்று
அறிவுமனம் உறுத்தவுந்தன் உணர்வுகொண்டான்.

பருவத்து ஞானம்மதி அழிக்க, என்ன
படுசெயலை யான்செய்யத் துணிந்தேன் சீச்சீ
சிறுபுத்தி என்றுதனைக் கடிந்து; நீண்ட
சேல்விழியாள் தனைநோக்கிச் செப்பலானான்,
''உருவத்தால் யாமறியாக் காதல்சேர்க்க
ஒன்றானோ முலகறியா உண்மைநட்பை;
பெருமைக்கு மீதாகா பெண்ணே, என்னைப்
பேணிநீ காணல்வரல் விடுதல்வேண்டும்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இராவேளை இருவருக்கு மேற்றதல்ல
ஏகிடுக'', எனப்பாஹிம் கேட்கச்; செல்வி
பெறாவொன்றைப் பெற்றுடனே இழத்தலென்ன
பெருமூச்சால் விடைபகர்ந்து நின்றாள்; அன்பு
அறாமகனும் அவள்துயரம் அறிந்துஞ்சொல்ல
ஆரணங்கின் உடல்மட்டும் நடந்ததங்கே;
புறாமகளை ஏற்றகரம் முகர்ந்தான்; இன்பப்
பொன்னரசி மனம்மட்டும் மாறவில்லை.

துள்ளுமான் விழிநங்கை இருளிலோடத்
துயரக்கல் மனக்குளத்தில் வீழ்ந்தலைக்க
வெள்ளிப்பூ மனநிலையான் வீழ்த்தானோடி
விரிந்தமலர் நிறைந்தமலர்ப் படுக்கைமீது;
பள்ளியிலே படித்தறியாப் பாடமொன்றை
படுக்கைதனும் விரித்தளிக்கப் பார்த்துப்பார்த்து
உள்ளமது களைத்துவிழி மூடலானான்
உறக்கத்துக் கேதினிய காதற்போக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

# பகைவன் பதியிலே

துள்ளலை கொள்ளும் வாவி
சூழவெண் பூக்கள் சிந்தும்
கள்ளொழு காவின் சேர்க்கை
கவின்நிறை வயல்கள், பாதை,
வெள்ளிவான் முட்டும் மஞ்சம்,
விரிந்த பொன்கட் டடங்கள்,
உள்ளக மீர்க்கும் நல்ல
உறுதொழில் நிறைந்த நாடு.

மலையிடை படிந்த மேகம்
மழைதர மாதம் மூன்று
கழையிடை புகுந்து தென்றல்
கானமாய்ச் சிந்த; எங்கும்
விளைபொருள் காண; யார்க்கும்
வேண்டுமட் டியும் மாந்தர்
நிலைகொள அழகு வாழும்
நீள்முடிப் பகைவன் பூமி.

உற்றவை பார்த்துப் பார்த்து
உறுபெரு வீரன் பாஹிம்
நற்பெரும் பரியில் ஏறி
நடத்தினன் நகரஞ் சுற்றி;
பெற்றநல் வெற்றி மீது
பெருமையோ சிறிது மற்ற
பொற்பொழு செம்மல் கண்டு
பூரித்தார் வெறுத்தா ரில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவ ரோடு நின்று
கதைத்தனன்; காதல் மாதர்
நின்றனர் அழகை யுண்டு
நீள்விழிப் பார்வை தேயப்;
பண்டவர் காணா ஆட்சி
புகர்ந்திடப் பாஹிம், கேட்டு
நன்றெனச் செப்ப லானார்
நல்லவர் வாழ்த்துச் சொன்னார்.

மாற்றா னென்(று)வஞ்ச முற்றார்
மனதிடை பகைமை போக்கி;
போற்றினர் பண்பைக் கண்டு
புகழ்பெரு வீரர் தம்மின்;
ஆற்றாது பகையில் வீழ்ந்து
அறிவினை யிழந்த ஜேகப்
சீற்றத்தி லாழ்ந்தா ஷென்ன
செய்வதென் றறியா னாக.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்த்தவர் இணைந்தனர்

சிறுபொழுதில் பகைமைநிலை மாய;அன்பு
சிநேகிதனாய்த் தன்னருகே யிருத்தியுண்டி
அறுசுவையில் அளித்துமனம் மகிழலானான்;
அன்புநனி கண்டுளத்தில் கறையுந்தேய
பெருவியப்பிற் றனைமறந்த உரோமனஸூம்
பேருவகைக் கட ் மூழ்கித் திணறித்தன்னின்
சிறுமைதனைக் களைந்துபுது மனிதனாகித்
திருமுடியோன் அர்ஸலானுக் கெதிரிருந்தான்.

நெருப்புடனே பஞ்சினிது கூடக்; கொதி
நெய்யூடே நீந்தச்சின் பூச்சி; நெடும்
பொருப்புடனே மடுவிணைய; பொல்லாப்பூறு
பூனையுடன் எலிகூடி வாழ, ஆங்கு
வெறுப்புடனே வாழ்ந்தஇரு வேந்தரண்டி
விளையெதிரீர் துருவங்கள் சேர்ந்தாற்போல
நெருக்கமுடன் இருந்துவுரை யாடல்கண்டு
நீளுலகும் உவகையிலே ஆடிற்றன்றோ.

இல்லறத்துப் பூங்காவில் மலர்ந்த பூக்கள்
எழில்மகளார் தமைவீர அர்ஸலானின்
செல்வருக்கு மணமுடிக்க இசைந்து நல்ல
தேனூற்றுச் சம்பந்தம் கலந்துகொண்டார்;
நல்லறத்து மலர்பூக்கக் கண்டுமண்ணின்
நானிலத்து மாந்தர்களும் வாழ்த்தலானார்
மல்லாடும் புயவீர உரோமனஸூம்
மகிழ்வாற்றில் மிதந்துபுவி மறக்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வந்த செல்வம்

சில்லென் தென்றல் இசையெழுப்பத்
தேனாம் மலர்கள் பாட்டிசைக்க;
முல்லை விரிந்து அபிநயக்க
மேளந் தட்ட மரமுட்டி
அள்ளக் குறையா நீர்ச்சுனைகள்
அனைத்துங் கூடி குளிருக்க
உள்ளங் கவருஞ் சோலையிலே
ஒருத்தி மட்டும் மகிழவில்லை.

குத்தும் வேலாய் இசையிருக்க
கொட்டும் தேளாய் மலரிருக்க
கத்தும் ஒலியாய்ப் பண்கேட்க
கடிந்து காவை விண்ணோக்கி
நத்தும் பாஹிம் தனைத்தானே
நங்கை வேண்டி யேங்குகிறாள்;
சித்தங் கலங்க செயலறியா (து)
செந்தே னிதழால் இசைபாடி.

## வேறு

கேட்கிறது அவரோசை
கிட்டியெனை வருவாரோ?
யார்க்குந் தெரிதலிலா
நல்லுளத்தில் வாழ்மகனை
பார்த்து மகிழ்வதெப்போ?
படுத்தவனின் மடிமீது.

கேட்கிறது.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

ஏணோடி விளையாடும்
எழிலான்விரி நெஞ்சணைந்து
தேனூறத் தலைசாய்த்து
சிந்தைமகிழ் எந்நாளோ?
கேட்கிறது.........

கூந்தலையான் கோதியுடல்
குளித்துவர இதச்சுனையில்
சேந்தவிதழ் சுவைப்பதற்கு
சேர்ந்தொழுகல் எந்நாளோ?
கேட்கிறது.........

துள்ளியான் ஓடஅவர்
துரத்தியெனைப் பின்தொடர
பள்ளியறை மூலையிலே
பதுங்கிடுதல் எந்நாளோ?
கேட்கிறது.........

வீரமிகு களம்புகுந்து
விளையாடி வீடுவரப்
பாரக்கழல் கழற்றும்
பாக்கியந்தா னெந்நாளோ?
கேட்கிறது.........

பாலடிசில் பழவகைகள்
பாகினிது ஈந்தவரைச்
சேய்விழியின் இமைகளுக்குட்
சேர்த்துயான் காப்பதெப்போ;
கேட்கிறது.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

இன்னனம் பாடி யேங்கி
இளங்கொடி யிருக்கப் பாஹிம்
நண்ணியே வந்து பின்னால்
நங்கையு மறியா வண்ணம்
சின்னிதழ்ப் பூப்ப றித்துச்
செல்வியைத் தாக்க; வடுக்
கண்களை விட்டா ளவை
கடிதெனச் செம்மல் பற்ற.

சிரித்தனன்; சிரித்தாள் நெஞ்சம்
சில்லெனக் குளிரக்; கண்கள்
விரிந்தன குவளை யென்ன;
விறல்மகன் கிட்டி வந்து
செறிந்த புற்றரையி லன்பு
தேங்கெழில் மங்கை நோக்கி
இருந்தனன்; இருந்தாள் முன்னி;
இடைவெளி குறுக வில்லை.

காந்தளாம் கைக்குள் மதி
கனிந்தபொன் முகத்தைத் தேக்கி
நீந்துவாள் போல நீட்டி
நிமிர்ந்தவள் கிடந்தாள்; செம்மல்
ஏந்தினான் விழிக்குள் ளந்த;
எழிலமயில் பாரந் தன்னைச் !
சாந்தமோ அமுதங் கூட்டச்
சதிவரல் எண்ணா ராங்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கண்ணா'' வென்றழைத்தாள் நறுங்
கனிச்சுவை யாக; நம்பி
பண்ணென ''ஏனோ'' வென்றான்
''பதிதனை அடைவ தெப்போ?''
சொன்னாற் றான்தூங் குவாயோ?''
தூரத்துக் கிடமே யில்லை;
பொன்னென நாளை பூக்கப்
புறப்பட வெண்ணி யுள்ளோம்''

கூறினான்; எழுந்தாள் துள்ளி
குலுங்கின்ற சிலம் பிரண்டும்
சீரடி எண்ண முன்னிச்
செவ்வடி பெயர்த்தாள்; பாஹிம்
ஓரடி நகர்ந்து பின்னால்
''ஒவ்வாது கண்ணே'' என்றான்;
நேரடி வார்த்தை யாலே
நெஞ்சக வுறுதி கண்டாள்.

''நாளைகாண்'' என்று கூறி
நம்பியும் நடந்தான்; செம்மைப்
பேழையென் வாய் திறந்து
பெறலரு நன்றி சொல்ல;
தாழையின் பக்கம் நின்ற
தகையிலான் எழுந்து மெல்ல
''நாளையோ'' என்ற றைந்து
நடந்தனன் திட்டந் தாங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்ப்பேன்

செல்வஞ் செழிக்க நாட்டினிலே
செந்நெல் லோங்கி வளர்ந்திடவே
நல்லோர் மழையைப் பொழியவென
நாடிக் கதிரோன் எழுந்துவர.
அல்லற் காண இளையாளின்
அவதி கண்டு கதிரோனும்
மெல்லத் தனது கதிரடக்கி
மேற்கை நோக்கி நடந்தனனே.

கொள்ளை ஆசை கொண்டுலகில்
கூடிக் குதித்த புள்ளினங்கள்
மெல்லத் தமது ஒலியடக்கி
மேவித் தத்தம் இல்லம்புக
பள்ளுப் பாடும் பைங்கிளிகள்
பாடல் ஓய்ந்து தூக்கமுற
குள்ளக் கோட்டான் எங்கிருந்தோ
குரலை எழுப்பி அலறியதே.

காதலன் கதிரோன் நகர்ந்திடவே
கமலம் இதழைச் சுருக்கிடநற்
பூதல மாந்தர் கொடுமைகளைப்
பொறுக்கா தல்லி மனம்புழுங்கி
வேதனை தாக்க விம்மிநெஞ்சம்
வெடித்தாற் போல இதழ்விரிக்க
பாதகங் காண கூசினாற்போல்
பதுங்கினள் திங்கள் முகிலிடையே.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

விண்ணிற் றாரகை மின்னிநிற்க
மேவிய நிசப்தம் சூழ்ந்திடவே
தண்மதி யெங்குங் கதிரோச்சத்
தரணியோர் தூங்கக் கடிநடையில்
புன்மன ஜேகப் காருறையும்
போர்வையிற் றன்னை மறைத்து; இளம்
பெண்மணி வாழும் பதிநோக்கிப்
போகிறான் மூச்சுப் புயலாக,

நீரரை மகளிர் வெண்பஞ்சு
நிலத்தினி லேறித் துயின்றாப்போற்
சீரொழு நங்கை துயில்கொண்டாள்;
சிந்தை காதலன் பின்தொடர;
பார்வையிற் பெண்மை பட்டுவுளப்
பண்பு சலன மடைந்தாலும்
வேரொடு ஜேகப் பழிபோமோ?
வெறுப்பாம் நஞ்சுள் மனம்மூழ்க.

தட்டக் கதவம் தனைத்திறந்து
தலைவனென்று கரம் நீட்ட;
துட்டன் உள்ளே புகுந்துவரச்
சோர்ந்தும் நெஞ்சம் தளராமல்
சிட்டு சிறகை விரித்தாற் போற்
சின்ன இதழாற் சிரிப்புதிர்த்தி,
''நெட்டுக் காதற் பெருமகனே,
நீடு வாழ்க நீவருக.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள்; ஜேகப் இடைமறித்து
"ஏதுக் கிந்தப் பகட்டெல்லாம்
உன்றன் களவை யானறிவேன்
உன்னை இனியான் விடமாட்டேன்",
என்றோன் நெருங்க இளமதியாள்
எதிரி நினைவைத் தானுணர்ந்து
நின்றாள் கட்டில் மறுமுனையில்
நீளுங் கரத்துக் கெட்டாதாய்.

தூசி யென்றா நினைக்கின்றாய்
தூய எந்தன் காதல்தனை
பாசி போல களைந்தறிய
பார்த்தாய் சமயம் பறிபோச்சி;
தாசி உன்னைத் தொலைப்பேனென்
தாயின் மேலே ஆணையடி
வேசி நில்லாய் என்றிரைந்து
வீரன் முழக்கஞ் செய்துவொரு.

கொடுவாள் தூக்கி எதிர்வந்தான்;
கூரிய மதியாள் தனைக்காக்கச்
சடுதி யாக இரும்பொன்றை
சட்டென அவன்மேல் வீசினளே;
படுசொற் பாவி எதிர்பாரா
பார இரும்பும் தாக்க; அவன்
நெடுசாய் மரமாய் நிலன்வீழ்ந்தான்;
நில்லா தவளும் ஓடினளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்து மெழுந்தான் விரைவாக
வீணே அவனின் முயற்சியெலாம்
ஆழ்ந்த அன்பு இளையாளின்
அகலல் தனையே அவன்கண்டான்;
தாழ்ந்து மிதக்க புயம்மூச்சாற்
றாவி அவளைத் தேடியிருள்
சூழ்ந்த பகுதி யெலாமோடி
துடித்தே நின்றான் பழிதீர்க்க.

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலராப் பொழுதே போ

கைமடித்துத் தலையணையாய் வைத்துநீண்டு
கதைசொல்லி மனம்துயிலை மாய்க்கப்பாஹிம்
பொய்யாக இமைமூடிக் கிடந்தானங்கே
புலராத பொழுதேநீ போபோவென்று.

ஊர்செல்லு மாவல்மிகு உந்தவீரர்
உறங்காமற் றங்கடமை யாற்றலானார்,
பார்வேங்கை தான்மட்டும் படுத்தானுளப்
பசியவனைப் படுக்காது புரட்டலாச்சு.

புத்தாடை கட்டிமனம் மகிழ்ந்துஆடும்
புதுப்பெருநாள் நாளைக்கு என்றாலில்லச்
சித்திரங்கள் புத்திரர்கள் நித்திரைதான்
செய்வாரோ? அந்நிலைதான் பாஹிம்தானும்!

மார்பினிலே சிறகடித்து மேளந்தட்டி
மலர்த்தலையைத் தூக்கினிய குழலாய்ஊதி
பார்விழிக்க முதற்கோழி கூவிற்றாங்கே
படுத்திருந்த பாஹிம்மண விழாவாய்க்காண.

விழிப்புற்ற கண்களுக்கு வெள்ளிநிலா
வீசுமொளி விடிவாகக் காணப்பாஹிம்
பழிப்பற்ற மெய்யழகி தன்னையேற்கப்
பறந்துவொரு பரியேறி ஓடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனுளப் பாங்கறிந்தாப் போலவாசி
விரைந்தோடித் தாள்பெயர்க்கத் துள்ளுங்கற்கள்
தூரவிழக் கீழ்கிடந்த கல்லிற்பட்டு
சுவாலையெழு மொளிவழியைக் காட்டலாச்சு.

வந்தவனும் நின்றுவெளிக் கதவினண்டை
''வடிவழகி இளமயிலே வந்தேன்வாவா'',
என்றழைத்தான் குரல்மட்டும் ஒலித்துநேரே
எதிரோதை யாகியது பதிலேயில்லை.

கூப்பிட்டுக் கூப்பிட்டுக் குரலுங்கம்மக்
குன்றுநிகர் மார்பழகன் கோபங்கொண்டு
ஆப்பில்லாக் கதவுதனை திறந்தானோடி
ஆவலுடன் உட்செல்ல அசந்துவிட்டான்.

பஞ்சணைதான் கிடந்ததங்கே பாவையில்லை;
பனிமலரின் பரல்கண்டான் குளுமையில்லை;
கொஞ்சுமொழிக் கிளியில்லை கூடுகண்டான்;
கொழுகண்டான் கொடியில்லை கூம்பிவிட்டான்.

ஆடைபல மடித்திருந்தாள் பயணஞ்செய்ய;
அழகுமலர் தொடுத்திருந்தாள் சூடிச்செல்ல;
தோடைபல உரித்திருந்தாள் சுவைத்துக்கொள்ள;
தோகைமயில் தான்மட்டும் அங்குஇல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்காண உணர்வின்றி; உள்ளந்தானும்
ஊறிவரும் நினைவின்றி வெறுமையாக;
நடைமட்டும் ஆடியதே சுவடுயின்றி
நம்பியதன் மேலிருந்து தேடலானான்.

வீடெல்லாம் தேடியுடல் வியர்த்துக்கொட்ட
வெளிவந்து வாசலெலாந் தேட; இருள்
கூடுமொரு மூலையிலே நின்றாள்மங்கை
குதித்தோடிச் சென்றானிள வாழையாச்சு.

மனம்நோவ மதிவாட மங்கைதேடி
மறுபடியு மவளறைக்குள் வந்தான்; உடற்
கனந்தாங்கு கட்டிலிலே இரத்தக்கறை
கண்டவனும் இளங்கொடிக்கு ஆபத்தென்றான்.

எட்டியொரு வேலெடுத்துப் பாய்ந்தான்வீரன்
ஏமாற்றம் சோர்வெல்லாம் தூரச்செல்ல;
சிட்டுவான் இளையவளைக் காப்பேனிந்த
செகமெனக்குத் தூசியெனச் சென்றானோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதித்தேறிக் குதிரைதனைத் தட்டிவிட்டான்;
குறையறியாப் பரிதுள்ளி யோடலாச்சு;
கதித்தவுடல் விறல்நம்பி காடுமேடு
களிலெல்லாந் தேடியுந்தான் காணவில்லை.

சோர்வறியா வீரமகன் தேடித்தேடிச்
சோதிமதி காணாது ஏங்குங்காலை
நேரிழையாள் தனைத்தேடிச் சென்றாளோவென்
நினைவுவரப் பாசறைக்குப் பறக்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குல் நகர்ந்தாள் கதிரோன் எழுந்தான்

கார்குழல் அவிழக் களிப்புறுநங்கை
கவலைகள் மூழ்கி யிந்தப்
பாரிகழ் ஜேகப் பார்த்திடா வண்ணம்
பதறியே ஒளித்திருத்தாள்
வேருட னழித்து வெற்றியே கொள்ள
வெறியோனும் முனைந்துநிற்க;
நேரினில் நின்று போரிட வெண்ணி
நின்றனள் கங்குல் அன்னை.

பூதலந் தன்னில் மோதிட வுன்னை
ஆதவன் எழுந்து விட்டான்;
பாதகா நீயும் பதறிட வுலகிற்
பார்த்துளம் மகிழ்வே னென்று
நாதலம் விட்டு நாணியே கங்குல்
நகர்ந்தனள் நலிவுடனே;
பாதவமீது படுத்தநற் புற்கள்
பறையொலி முழக்கினவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

# சேர்த்து வைத்த காதல்

ஓடுகின்ற வீரன்முனம் பட்டதெல்லாம்
ஒடிந்தே துகளாகிவெளி கலக்கவுளம்
தேடியிள நங்கைதனை வாடிநிற்கத்
தென்பட்ட யாவுமவ ளாகக்கண்டான்.

ஆடுமென் கொடியவளின் அசைவைக்காட்ட;
அழகுமலர் விரிப்பவளின் சிரிப்பாய்மேவ;
நீடுவெளி யவளிடையின் தோற்றங்காட்ட;
நினைவிலவள் உருவேறு ஆடிற்றம்மா.

இடைவழியிற் பெருவனத்துள், ''என்னைவிடு''
என்றலறும் பேரோசை காதிலேற
நடையொழித்துப் பரியோட்டிச் சென்றானாங்கே
நங்கைதனைப் பரியேற்றி நின்றான்ஜேகப்.

வேங்கைவரக் கண்டஞ்சி விரைந்துஜேகப்
வேகமுடை பரியேறி மயிலைப்பற்றித்
தாங்கியிடை கைவளைவி லோடலானான்
தகைவீரன் பின்னாலே துரத்திச்சென்றான்.

மட்டைபட்ட பந்தாகப் பறந்தானன்னான்
மண்ணெழுப்பிப் பின்னாலே சென்றும்பாஹிம்
எட்டாத தூரத்தில் எதிரிசென்றான்;
என்றாலும் இளவீரன் சளைத்தானில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாகப் பறந்தானிள வேங்கைபோல
கணப்பொழுதில் இடைவெளியுங் குறையலாச்சு;
வேற்றுவழி அறியாது வேலையோங்கி
வேங்கைதனைக் குறிவைத்து வீசிவிட்டான்.

குறிதவறி வேல்விழவே பாஹிம்ஓடி
குதிரைதனை மறித்தங்கே நிற்கவெகு
வெறிமுகத்தான் வாளோங்கி வந்தான்முன்னி
வீரமகன் வேலெடுத்து வீசிவிட்டான்.

வீசியவேல் பட்டுடலைந் தாக்கமாற்றான்
வீழ்ந்தானிள மானுடனே மண்ணில்; மிகு
தூசியெழத் துள்ளுபரிக் காலிற்பட்டு
துவையுண்டாள் சோதிமகள் துன்பமோங்க.

கண்வண்டு மொய்மலராம் நெஞ்சிலூறு
கடிநடைகொள் அசுவத்தா லாகச்சாய்ந்து;
பொன்வண்டு புழுதியிலே புரளலாச்சு
புனிதமெய்க் காதல்மகன் பதறிவந்தான்.

குற்றுயிராய்க் கிடந்தவிள மங்கை தூக்கிக்
குணமகனும் மடிவைத்து, ''அன்பே''என்றான்
பொற்புடைய செல்விமலர்க் கண்விழித்துப்
பூரித்தாள்; பூப்பங்கே நின்றாற்றானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னன்பே என்னானாய்'', என்றானேங்கி
இளங்கொடியா ளினியமொழி யேதுஅங்கே;
பொன்னகத்தாள் சவமாகக் கிடந்தாளின்பப்
பூங்கொடியின் சாய்வவனை மாய்க்கலாச்சு.

புல்நுனியிற் பனிமுத்துப் பூத்தாற்போல
பொலுபொலெனக் கண்ணீரு மாறாய்ச்சிந்த
சொல்லவொண்ணாத் துயர்மதியை மாய்க்கநம்பி
சுருண்டுபுதுப் பாயாகச் சுழலலானான்.

தற்கொலைக்கு மனந்தாவும் ஆனால்மதத்
தடுப்பதனைப் பின்னுணரும் அதனாலந்தப்
பொற்கழலோன் முடிவின்றித் துடித்தானெழு
பெருமூச்சா லுடல்குன்றக் குமுறலானான்.

தேன்சிந்து மிதழ்களிலே சிரிப்புச்சாகச்
சில்லென்ற பார்வைதனும் மாய்தலேற்க;
வானாடுங் கார்கூந்தல் கலைவுகொள்ள
வண்ணமுகம் சாந்தமுறு நிலவாய்க்கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

துடித்தவன் வீழ்ந்தா னையோ
தூண்டிலிற் பட்ட மீனாய்
வெடித்தது இதயம் விம்மி;
வீரிட்டான் வேத னையால்
தடித்திடக் கவலை நெஞ்சுள்
தண்மதி முகங் கறுக்க
பிடித்தெழிற் கேசந் தன்னை
பிய்த்தங்கே அலற லானான்.

முட்டிய துன்பம் நெஞ்சுள்
மோதிமென் இதயந் தாக்க
கட்டெழிற் பாஹிம் தன்னின்
கண்களும் இமையுட் சேர
வெட்டிய மரமாய் அந்த
மேன்மகன் வீழ்ந்தான்; மண்ணில்
கொட்டின மலர்கள் கானின்
கொடிகளும் மரமு மன்றோ.

வானக மழுது கண்ணீர்
வடித்தது மழையாய்; எங்குங்
கானகந் தானும் விம்மிக்
கருகியே நிற்க; இன்பத்
தேனகஞ் சூழ்ந்த காதல்
சிதறியே மாய; மூன்று
ஊனகங் கிடந்த தங்கே
உயிர்வளி கலந்து செல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகியற் சொல்லின் செல்வி
பனிமலர் விழிகள் மூடி
வாகைகொள் வீரன் பாஹிம்
மடியினிற் கிடந்தாள்; வெண்மைத்
தோகியல் மயிலாய்க் காண
சோர்ந்தன கண்கள் ஆவி
ஏகியே கிடந்தான்; காண
ஏங்கின கண்க ளெல்லாம்.

PUBLIC LIBRARY,
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

காற்றுடனே கலந்துஇளந் தென்றலானார்
காதல்நறுங் கனிபுகுந்து சுவையாய்மாற;
சேற்றிலலர் கமலமெனும் இதயங்கூம்பி
செந்தளிரா ளுடன்பாஹிம் சேர்ந்துகொண்டான்.

## வேறு

அன்பில் ஆழ்ந்தவர் அமைதி கொண்டனர்;
நண்பில் இணைந்தவர் நாதி கண்டனர்;
பண்பென் வாழ்க்கைப் பாதை முடிவிலே
என்று கதிரவன் ஏகி மறைந்தனன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org